KALANILAYAM

தனிப்பிரதி விலை அணா 0-2-6.

கலா நிலயம்

V7, No-38. 27.9.1934.

JL
M211, N28 KN
N34:738
199188

KALANILAYAM

தனிப்பிரதி விலை அணா 0-2-6.

கலாநிலயம்

A Literary Weekly

வியாழன்தோறும் வெளிவரும்.

உள் நாடு—வருஷ சந்தா ரூ. 7 0 0

புற நாடு—வருஷ சந்தா ரூ. 9 0 0

காரியாலயம்:—

வேளாளர் தெரு,

புரசைபாக்கம், சென்னை.

Vol 7.] 1934 ஹு செப்டம்பர் மீ 27உ [No. 38

பொருளடக்கம்.

1. தலையங்கம் (Leader) 593
2. கம்பராமாயணம் (வாலிவதைப் படலம்)
   T. N. சேஷாசலம் B.A. B.L. 595
3. கர்ணன் மாண்பு
   K. T. விஜயராகவாச்சாரியார். B.A. 598
4. தமிழ்ப் பாடம்—
   நைடதம்—நளன் தூதுப்படலம். 600
5. சூளாமணி (இரதநூபுரச் சருக்கம்)
   வித்துவான்
   T. P. மீனுக்ஷிசுந்தரம் பிள்ளை M.A.,B.L. 602
6. அப்பர் (64-கலை இதிகாசம்-பாண்டவகௌரவர்)
   E. N. தணிகாசல முதலியார் B.A. B.L. 603
7. மலர்வனம்—புன்னைத் தங்கை
   "மதுகரம்" 605
8. அதுவும் இல்லை (சிறு கதை)
   K. S. முத்துராமலிங்கம் M. A. 606
9. வர்த்தமானம் 608

கலாநிலயம்

எத்தைக் கண்டு இச்சை கொள்வோம் 6.

உலகத்தின் இரகசியம் இன்னதென்று உண்மையைக் கண்டுபிடித்துவிட்டதனுற்றுன் நம்முடைய வாழ்க்கை பொருளும் பயனும் அற்றதாகி ஊக்கமழிந்து யாரும் உணங்கவேண்டியதாயிற்று என்று வில்ரோன்ட் உரைத்ததை மறுத்து, உண்மையைக் கண்டுபிடித்துவிட்டோம் என்ற கருத்தே பொய்யாகுமென்று, கார்ல் லேம்மல், எட்வின் ஆர்லிங்டன் ராபின்ஸன், எர்னஸ்ட் டிம்னட் அனையசிந்தனையாளர் செப்பிய சில மொழிகளை இதன்முன் எடுத்தெழுதினேம்.

இவ்வண்ணம் பூத சாஸ்திரங்களின் முடிவுகளாகத் தற்காலம் ஆராய்ந்து உரைக்கப்படுகின்றவைகளை உயிர்வாழ்க்கையின் உண்மைகளெனக் கொள்ளலாகாது என்று சாற்றுகின்ற இவர், தொன்றுதொட்டு வந்த நம் சமய நூல்கள் உண்மையென வற்புறுத்துகின்றவற்றைஏற்றுக்கொள்வதே தக்கதென்று கருதுகின்ற நினைவினையும் தெரிவித்தாரலர். மற்று, ஜான் கூபர் பாய்ஸ் என்பார் ஒரு அமெரிக்க சிந்தனையாளர் பண்டையவைகளை ஆதாரமாகக்கொள்ள ஆற்றுமலும், தற்காலக் கொள்கைகளை உண்மையென்று நம்பநினைக்காமலும், இவை யிரண்டிற்கு மிடையே வாழ்க்கையை எவ்வகை வழிசெய்துகொள்ளலாமென்று, வில் ரோன்ட்டிற்கு விடுத்த விடையில், நுனித்துரைக்கின்றுர். அதனைச் சற்றே ஆராய்வோம்—

"அன்புடைய ரோன்ட்,

இத[illegible]னர் முறைசெய்து வைத்திருந்த தெய்விகச் செய்தியெல்லாம் இப்பொழுது அடியுடன் இடிந்து விழுந்துவிட்டபடியாலும், [illegible] பெறுகின்ற குடிவாழ்க்கை முறைகளில், உண்மையான விடுதலையேனும் 'கல்சரே'னும் இல்லாமற் போய்விட்டபடியாலும், இனி ஒவ்வொருவனும் தன்னையே தனக்கு ஆதாரமாகப் பற்றி வாழவேண்டியவனுகிவிட்டான். அவனவன் தனக்காகத் தன்னிலேயே, பக்திரம்பிக்கை இன்பம் ஆகியவைகளின் இரகசியங்களை மீண்டும் மீண்டும் கண்டுபிடித்துக் கொள்ளக் கூடும்.

"இந்த இரகசியங்களின் இந்திரஜாலம் போன்ற சக்திகளும் சாதனைகளும் உணர்ச்சிகளும் இயற்கைப் பிரகிருதியில் இன்னும் காணக் கிடக்கின்றன; அவைகளை வலியவர்கள் எத்துணை அனுபவிக்கின்றுர்களோ அத்துணை அளவு எளியவர்களும் அனுபவிக்கக்கூடும். அவனவனுக்கிருக்கின்ற சூக்ஷ்ம வாழ்க்கையின் நன்னீர் ஊற்றுக்கள், அவ்வப்போது தோன்றி மறைகின்ற சிந்தனைகளின் சூழ்ச்சிகளால் சற்றேனும் அழிந்துபோகக் கூடியதொன்றன்று. அரசியல் முறைகளும் பொருளாதாரமுறைகளும் சிறந்த காலத்தும் அவ்வூற்றுக்கள் இருக்கஇயலும், சிதைந்த காலத்தும் அவை இருக்க இயலும். வலியோரைப்போல எளியோரிடத்தும் நட்புடையது இப்பிரகிருதி; இவ் வியற்கைவிதிகளை அறிவிற்கு இணங்கும்படி முறைப்படுத்துவதனுள் மெய்ம்மை அடங்கிவிடவில்லை. மற்று, ஒவ்வொருவனும் தனித்தனி தன்னுடைய அறிவினைப் பிரகிருதியோடு இணங்கும்படி இணைக்கின்ற நுண்ணிய முறையை அரிதிற் பெற்று அரிதின் வைத்திருப்பதால் உள்ளுணர்வினின்றுவளர்கின்ற அவ்வளர்ச்சியேதான் மெய்ம்மைக்கு இருப்பிடமாம்.

"அவனவன், இப்பிரகிருதியின் அதிசயத்தையும் தன் உயிர்வாழ்க்கையின் அதிசயத்தையும்தனித்தனி தன்னில்

அனுபவித்து நன்கு உணர்வானாயின், சித்தத்தின்விடுதலையிலும் ஆன்மாவின் சக்தியிலும் வாழ்க்கையின் பொருளாயமைந்த விந்தையிலும் மீண்டும் நம்பிக்கை பெற்றவனாவான். அவனவன் தன் சுய சிந்தனையைப் பிரகிருதியோடு இணக்கிக்கொண்டு, தனக்கே யுரிய கருமத்தை, தனக்கே யுரிய அழகை, தனக்கே யுரிய மெய்ம்மையை, தனக்கே யுரிய செம்மையை, தனக்கே யுரிய இன்பத்தைக் கண்டுகொண்டவனாகி, மற்றவைகளை யெல்லாம் அஞ்சினான்போல் பாவித்து, கிடக்கட்டும்என்று அலக்ஷியமாக விட்டுவிடநேருங்காலத்தில், இப் பூதசாஸ்த்திரங்கள் அறிவிற்கு ஏற்றதாய் அவ்வப்போது கண்டுபிடித்துத் தருகின்றவைகளெவ்வகையிலும் சிறிதளவேனும் முக்கியமாகமாட்டா.

"இயற்கைப் பிரகிருதியைப் பூதசாஸ்த்திர ஆராய்ச்சிக்கிணங்க முறைசெய்கின்ற இந்த எண்ணத்திற்கு எதிராக ஒவ்வொருவனும் தன் சுயசிந்தனையைச் சார்ந்துநிற்கின்ற ஒரு காட்சியை வளர்த்துக்கொள்ளல் வேண்டும். இந்தக் காட்சிகொண்டு, பிரகிருதியின் தோற்றத்தைக் காணுங்கால், கரவில்லாக் குழந்தைகளைப்போல் வியப்பதுடன், அப் பிரகிருதியின் உண்மைகளென்றும் விதிகளென்றும் பொதுப்படக் கூறப்படுபவைகளை யெல்லாம் நம்பாமல் பாமரர்போல் சந்தேகப்படுதலும் வேண்டும்.

"நம்பியபக்தியுடன் நம்பாதசந்தேகமும் ஒருங்கே நிகழும்படி ஒவ்வொருவனும் தன் சுயவாழ்க்கையில், எண்ணத்தின் உணர்வின் இரகசியமானவொரு விடுதலையைச்சேர்த்துக்கொள்ளவேண்டும்; தனக்குப் புறமான பொருள்களைத் தன் உடலிற்கும் ஆவிக்கும் வேண்டியபடி மிகவும் திறமையுடன் திரித்துக்கொண்டாலும், அவனவனுடைய இன்பத்தின் நன்னீரூற்றுக்கள் அப்பொருள்களையும் நிலைமைகளையுமே சார்ந்துகிடக்காமல் விடுதலையடையவேண்டும்; அவசியமில்லாத சிறு சிறு விடயங்களில் விட்டுக்கொடுத்தாலும், முக்கியமானவைகளையோ விடாப் பிடியாய்ப் பற்றிக்கொள்ளவேண்டும்; விந்தையினும்விந்தைகளாயிருப்பவைகள் நமது அறிவிற்குமெட்டா உண்மைகளாகவும் இருக்கலாம் என்ற எண்ணத்தை அடைத்துவிடாமலே, அவ்வெண்ணத்திற்கு அடங்கினவர்களாய், பிரகிருதியைப் பற்றியும் உயிரைப்பற்றியும் பூதசாஸ்த்திரத்தின் அறிவுகொண்டு ஆராய்தலும்வேண்டும்; சுயநயத்தின் கொடுமையைக் கையாளாமலும், மற்று, இரக்கத்தால் மனங்கலங்கி அழியாமலும் தன்னைக் காத்துக்கொள்ளவேண்டும்; இவ்வுலகத்தோற்றங்களையெல்லாம் ஒரு கனவினுட் கனவேபோல் கருதி அக்கனவினின்று மரணமே நம்மை இறுதியில் எழுப்பக்கூடியது மாகலாம் என்ற நினைவினோடு நடமாடல் வேண்டும்; கொடுமை செய்வதே தீமை யென்றும், எல்லாப் பிராணிகளும் புனிதமானவைகளென்றும், கொள்கின்ற கொள்கைதவிர வேறெவ்விதக் கொள்கையும் கொள்ளாம லிருக்கவேண்டும். இவ்வகைகளினாற்றானொருவன், கிரகங்களும் நக்ஷத்திரங்களுமாகி அமைந்துள இந்தப் பிரபஞ்சத்தை இரண்டாவதாகத் தள்ளி, அவைகளைத் தெளிந்துகொள்கின்ற தனது அதிசயமான உணர்விற்கு முதலிடங்கொடுக்கக்கூடியவனாவான். உயிர்வாழ்க்கையை நிரந்தரமாக்கிய ஊக்கம் அதனிற்றான் அடங்கியிருக்கின்றது.

இப்படிக்கு
ஜான் கூபர் பாய்ஸ்.

* * *

ஜான் கூபர் பாய்ஸ் கவிதாஇதயம் உடையவர்; ஆதலால் இவ்வுலகத்தையும் இதன்கண் உள்ள மனிதரையும் வெறும் ஜடமாகவே கருதுவதற்கு அவர் மனம் இசையவில்லை. இளகிய இதயமுடையவரிவர்; தான் ஒரு நாஸ்த்திகனே என்று உலகறிய விளம்பிப் பெருமிதம் பேசிக்கொள்ளும்போதும், தான் மறுக்கும் அக்கடவுளுக்கே துதிபாடிக்கொண்டிருப்பவர் ஆகின்றார். கவிதா இதயமுடையவர்கள் அதற்கு மாறாய் மிக முயன்று கடவுளை மறுக்கப்புகுங்கால் நேர்கின்ற நிலை இது. ஆங்கிலக் கவிகளில், ஸ்வின்பர்ன் (Swinburne) ஷெல்லி(Shelly) கீட்ஸ் (Keats) என்பவர்களும் இப்படியே செய்தனர். கவிவரர்களுக்கும் அவர்கள் அல்லாதார்க்கும் உள்ள வேற்றுமை இன்னது: இருவருக்கும் மனமொன்று எண்ண வாயொன்றுபேசக்கூடும்; ஆயினும், கவிவரர், கடவுளைத் தம்வாயினால் மறுக்கநேர்கின்ற காலத்தும் மனத்தால் தம்மையறியாமலே உவப்புறநினைத்து ஆராதிக்காமலிருக்கஇயலாது; மற்றவர்வாயால் கடவுளை வழுத்துங்காலத்திலும் மனத்தால் நினைக்கும்வகை பெற்றிருத்தல்மிகஅரிது. இவ்வுலகத்தை ஒருஎந்திரச்சூழ்ச்சியாகக்கருதுகின்ற எண்ணமானது கவிதையின் கைபட்டவுடன் கலைந்துவிடும்; கலைந்து, ஆன்மவளர்ச்சியிலேயே ஒருவனைப் பொலியும்படி செய்வது கவிதையின் இயற்கை. எனின், மாரிஸ் மாட்டர்லிங்க் என்னும் பெல்ஜியவித்தகர் விளக்கியுள்ளவண்ணம், இவ்வான்மதாகமாம் கடலினை நம்முடைய அறிவினால் கடையுங்கால் திரண்டெழும் அமுதவடிவன்றோ அக்கடவுள். சொல்லால் எத்துணை உழக்கினாலும், கவிதையைக் கருத்துட்கொண்டவர் கடவுள் நினைவிலிருந்து தம் மனத்தை அடியுடன்வஞ்சித்துக்கொண்டுவிடுதல் இயலாது. இது திண்ணம். முன்இங்கு மொழிபெயர்த்து வரையப்பெற்றுஇருக்கின்ற எட்வின் ஆர்லிங்டன் ராபின்ஸன் என்பவர் வில் ரோன்ட்டிற்கு எழுதிய விடையிலும் இந்த இரகசியத்தைக் காணலாம். இவ்விருவர் கடிதங்களிலும் கடவுளென்னும்பெயர்வரவில்லையாயினும், கடவுளின் சித்தத்தை நம்புதற்குக் கூசுகின்றார்போல் அவர் பேசுமிடத்தும், அங்கிங்கெனாதபடி எங்கும் பிரகாசமாய் வெளிநின்றே மறைகின்ற வொரு பொருளினைத் தம் மனம் சார்ந்திருக்கின்ற வொரு செவ்விய இரகசியத்தைத் தாமேயறியாமல் தெரிவிக்கின்றனர்.

சார்லஸ் பியர்ட் (Charles Beard) என்பார் இன்னொருவர் இப்படியே, உலகம் இவ்வாறு நடைபெறுவது ஈசுவர சித்தமே போலும் என்று இயம்பாமல் இயம்பி யெழுதிய வொரு விடையும் இங்கு ஒப்பு நோக்கத் தக்கது:—

"எனது அருமை வில் ரோன்ட்,

நீங்கள் கேட்கின்ற கேள்வியினும் முக்கியமானது வேறொன்றில்லை. அதற்கு நேரிய விடையொன்று கொடுத்தலோ மிக அரிது. ஆயினும் அதற்கு அஞ்சி அகன்றுவிடலாகாது. உண்மைவெளிப்பட்டு வரும்போது மிகவும்பயங்கரமானவோர் உருவமே எடுத்துக்கொண்டுவரும் என்று ஒருஆங்கில கவி மில்டன் (Milton) கூறினார். புதிய உண்மைகள் நம் பழையநம்பிக்கைகளைச் சிதைத்துச்குழப்பிவிடும் என்பது அவ்வாசகத்தின் பொருளாவது அறிவேன். ஆயினும் அப்புதிய உண்மைகளோடு நாம் பழகப் பழக அவைகளை நம்மோடு இணைத்துக்கொண்டு வாழவல்லவர் ஆகிவிடுகின்றோம்.

"நம்முடைய மிக அருமையான குறிக்கோள்கள் பல மீண்டும் தலையெடுக்கமாட்டாமல் மண்ணோடு மண்ணாய் நசுங்கி அழிந்துபோயினவென்னத் தோன்றியபின்னரும் நாமோமேலும்மேலும்ஏதோமுயன்றுகொண்டேபோகின்றோம். என்? காரணம் நமக்குத் தெரியாது. ஆயினும், ஒருவாறு ஊகித்தால் ஊகிக்கலாம். வயிற்றுப் பிழைப்பிற்கு எப்படியும் வழிதேடத்தானே வேண்டுமென்பது ஒரு காரணமாகலாம். ஆயினும் இதுவொன்றே போதாது. ஏனெனில், அளவற்றபொருள் ஈட்டியபின்னும் ஓயாமல் உழைத்துக்கொண்டிருப்பவர் எத்தனையோ பலர் இருக்கின்றார்களே. மற்றுஞ் சிலர், முற்றிலுந் தோற்று யாதும் செய்ய வகையற்றபோதும், ஏதேனும் இன்னும் செய்து பார்க்க வேண்டுமென்ற எண்ணமே உடையவராகி உழைக்கின்றனர்.

"நம்மையே நாம் ஆராய்ந்து சோதித்துக் கொள்வோமானால் நாம் முரண்பட்ட நோக்கங்கள் உடையவர்களாயிருக்குந் தன்மை தெரியவரும். நம்முடைய இலாபத்திற்கே அவாவி நாம் மிக்க சுயநய சிந்தனையுடையவர்களாய் விவகரிக்கும் வேளை சில. மற்று, சுயநயச் சிறுமை நீங்கிப் பெரியபெரிய காரியங்களுக்கு நம்மை உவகையோடழைக்கின்ற வேளைகளும் உள. எல்லோர் திறத்திலும், உயர்ந்தோர்மாட்டும் தாழ்ந்தோரிடத்தும் இவ்வகை நேர்வது நிச்சயம். எவ்வளவு சாதிக்கின்றார்களென்பது அவரவர்களைச் சார்ந்தது.

"என்வரையில், மானுட சரித்திரத்தின் நாடகம் இதுகாறும் நிகழ்ந்திருப்பதை நினைத்துப் பார்க்குங்கால், இவ்வலங்கோல அவலங்களுக்கிடையேயும், படுநாசமாகியபலவற்றிற்கிடையேயும், ஒரு ஒழுங்கும், முறைமையும், மனிதன் சாதித்தசில பெருமைகளும், என் கண்களுக்குத் தென்படுகின்றன. ஒருவரை யொருவர் பிடித்துத்தள்ளி மிதித்துமாய்க்கின்ற வொரு படுகுழியேயென்று இவ்வுலகினை நான் கருதமாட்டேன். இந்தக் கொடுமைகளுக்கும் துன்பங்களுக்கும் இடையே மிக்க மகத்தான யாதோ வொன்று நடைபெற்றுக்கொண்டிருக்கின்றது. இவைகளுக்கு இடையே மனிதனது பரம்பரைச்செல்வம் தலையெடுத்துத் திகழுமாறு புரியவல்லதோ மானுட அறிவு என்ற சோதனை அவசியமாகிய வோர் தருணம் இது. பிரபஞ்சம் ஏற்பட்டபோது அதன் முழு நோக்கம் யாதென்பது தெரியாவிட்டாலும் சிற்சில பாகங்கள் தெரிகின்றன. அந்தச் சித்திரத்தை மனித இனம் முழுமையாக்கி முடித்துக்கொள்ள இயலும். வாழ்வாங்கு வாழவேண்டியவோர் நல்வாழ்க்கை இவ்வகைத்து என்னும் அறிவே அப்பரம்பரைச் செல்வமாம். இந்தப் பூதசாஸ்த்திரங்கள், பிரகிருதியை நாம் கையாளவல்ல சக்தியைக் கற்றுக் கொடுத்திருக்கின்றன. அதனால் நல்வாழ்விற்கு வேண்டிய உபகரணங்களை அமைத்துக்கொள்ள இயலும். இந்நாடகத்தில் மிகவும் நம் கவனத்தைக் கவரத்தக்க பாகம் இதுவே. இந்த எண்ணத்தால்தான் மிகத் தளர்ந்த வேளையிலும் நல்வாழ்க்கையே நம் நோக்கத்தின் முடிவாக இருக்கவேண்டும்; அதனையே ஆதரிக்கவேண்டும், அனுபவிக்கவேண்டும். இந் நல்வாழ்க்கை தலையெடுக்கும் வகையே, அறிவுடைய எல்லா முயற்சிகளும் நாடவும் வேண்டும். இந்த எண்ணத்தின் எல்லைக்குள் என் வாழ்க்கையை நடத்திவருகின்றேன்.

யான் கண்டபடி இது; எத்துணைச் சிறந்த தத்துவசாலிகளும் தாங் கண்டவைகளைத்தானே கூற இயலும்.

இப்படிக்கு
சார்லஸ் எ. பியர்ட்.

* * *

கலக்கமுடைய இவ்வுலகம், காட்சிக் கினியதாய் அமையாவிடத்தும், மனிதர் நல்வாழ்வு வாழ்வதற்கு நிலைக்களமாயிருத்தலால், கருதற்கினியதேயாம் என்பார் இந்தப் பியர்ட் என்பவர். இந் நல்வாழ்வு எவ்வகைத்து என்ற கேள்வி எழுங்கால் அது பல்வேறு கிளைகளாகப் பிரிந்து பிரிந்து வளரக்கூடும். ஆயினும் அக்கிளைகள் அனைத்தையும் ஒரே மரமெனும் முழுமையில்நோக்கி அதன் நிழலை நாடுவதிற்றான் அலைப்புண்ட இம்மானுட மதியின் திறமை அடங்கியிருக்கின்றது. நாம் இவ்வுலகில் பெறக்கூடியன எத்தனையோபல; இழக்கக்கூடியனவோ அதனினும் அதிகம். மனிதர் சிலவற்றைப் பெற விழைகின்றனர், சிலவற்றை இழக்க அஞ்சுகின்றனர். பெறுவதற்கு விழையாததையும் பெற்றபின் இழக்க அஞ்சுகின்ற விபரிதத்தையுங் காணலாம். இந்தப் பிறவியே இதற்கு ஏற்ற உதாரணம். அவ்வாசையும் இவ்வச்சமும்இருபுறத்தும் இவ்வாழ்க்கையைப் பிடித்திழுத்துப் பிய்த்துவிடுகின்றன. இங்கிலையில் வில் ரோஜர்ஸ் என்பவர் ஒரு உபாயம் கூறுவார். நமக்கு வாய்த்தது எதுவாயினும் அத்துணையும் நல்லதே என்றும், மற்று, நாம் இழந்தது எதுவேயாயினும் அத்துணையும் இலாபமே யென்றும் கருதி வாழ்வதே நல்வாழ்க்கை என்கின்றார் அவர். கடவுளின் சித்தத்திற்கு உன்னை முறை செய்துகொள் என்பதல்லாமல் இதன்பொருள்வேறு யாதுமில்லை.

கம்பராமாயணம்

கிஷ்கிந்தாகாண்டம்—7. வாலிவதைப் படலம்

[583-வது பக்கத் தொடர்ச்சி]

வானர மேனீ மானுட னாவாய்.

தஞ்சம் புகுந்த தன் தம்பியை இரங்காமற் கொலைகொண்டு துரத்தியதோடு அவன் தாரத்தையும் வௌவிய குற்றம்பற்றி வாலியைத் தான் கொன்று தீர்த்தனன் என்றவளவே இராமபிரான் கம்பர்தம் நூலினுள் காரணங்காட்டினானன்றி, வான்மீகர் நூலினுட்போல், பரதனுடைய அனுமதியினால் கொலைத் தண்டனை விதிக்கத் தனக்கு அதிகாரம் உண்டென்றேனும், விதித்த அத்தண்டனையை வாலியாகிய அவ்விலங்கினிடத்தில் மறைந்து நின்று நடத்திவைப்பது தகுமென்றேனும் வாதிக்கவில்லை. மற்று, வாலி நேர்முகமாகக் கேட்டிருந்தும், தான் மறைந்துநின்று எய்ததற்கு வேறெக்காரணமும் விளம்ப நினைத்தானுமல்லன்; வாலி செய்த பிழையையே இராமன் வற்புறுத்திக் காட்டினான். இது, விளைந்தகேள்விக்கு விடையிறுக்காமல் வளைந்து செல்லு மொருவகையே சூழ்க்

199188

ததாம். வாலியும் அன்னபடி அதனை உணர்ந்திருப்பான்; ஆயினும், தண்டனையை நடத்தும் வகை எதுவேனும் ஆகுக, அவ்வாறு தண்டிக்க அதிகாரம் இலதாயினும் ஆகுக, தன்பாற்பிழைகாணற்கு அழைத்து உரைத்த 'சட்டமே' தனக்குப் பொருந்தாமை காட்டிஞற்போதுமென்னும் புந்தியனுய் வாலி இவையிவை இராமனுக் கெதிர்விளம்புவா னயினன்:—

பிழைத்த தன்மை யிதுவெனப் பேரெழில்
தழைத்த வீர னுரைசெயத் தக்கிலா
திழைத்த வாலி யியல்பல வித்துணை
விழைத்தி றத்தொழி லென்ன விளம்புவான்

[நீ இவ்வண்ணம் பிழைசெய்தாய் என்று, மிக்க அழகு வளர்கின்ற வீரனுகிய இராமன் சொல்ல, தகாதவைகளைச் செய்த அவ்வாலி, "நீ உரைத்த இவ்வளவும் வானரமாகிய எனக்குப் பொருந்தக்கூடியன அல்ல; விரும்பியபடி விரும்பியதைச் செய்வதே எங்கள் இனத்திற்கு உரியது" என்று விளம்புவானுனன்.]

எனக் கம்பர் முதலில் வாலியின்கருத்தைத் தொகுத்துச்சுட்டிப் பின்ன ரதனை விரித்துரைத்து வைக்கின்றுர். மிக மெல்லிய குரலிற் பேசுகின்றுன் வாலி—

ஐய நுங்க ளருங்குலக் கற்பினப்
பொய்யின் மங்கையற் கேய்ந்த புணர்ச்சிபோல்
செய்தி லன்னெமைத் தேமலர் மேலவன்
எய்தி னெய்திய தாக வியற்றினன்

[ஐயனே, உங்கள் அருமையான குலத்தில் தோன்றிய கற்போடு கூடிய பொய்ம்மையில்லாத அம் மானுடமடந்தையர்க்குப் பொருந்திய கலியாணம்போல, எங்களுக்கு, தேன் பொருந்திய மலரிலுள்ள பிரமனுனவன் விதித்திருக்கவில்லை. நேர்ந்தபோது நேர்ந்தபடி புணரும் ஒழுக்கமுடையவைகளாய் எங்களைப் படைத்திருக்கின்றுன்]

மணமு மில்லை மறைநெறி வந்தன
குணமு மில்லை குலமுதற் கொத்தன
உணர்வு சென்றுழிச் செல்லு மொழுக்கலால்
நிணமு நெய்யு மிணங்கிய நேமியாய்

[பகைவர் நிணமும் பூசிய நெய்யும் பொருந்திய சக்கிராயுத முடையவனே, மனம்போன போக்கெல்லாம் போவதே எங்களுக்கு ஒழுக்கமாகுமே யல்லாமல், வேதவிதிப்படி வந்த விவாக முறைகளேனும், வம் சபரம்பரைக்கு ஒத்த மரபுக் குணங்களேனும் எங்களுக்கு இல்லையே]

பெற்றி மற்றிது பெற்றதொர் பெற்றியிற்
குற்ற முற்றிலெ னீயது கோடியால்
வெற்றி யுற்றதொர் வெற்றியி னுயெனுச்
சொற்ற சொற்றைக் குற்றது சொல்லுவான்

[என்னை வென்றுவிட்டமையால் வெற்றியுடையவனுக விளங்குகின்றவனே, எங்கள் பிறப்பிற்குரிய தன்மை இது; நான் அடைந்துள்ள ஜாதி ஒழுக்கத்தின்படி யான் எவ்வகைக் குற்றமுஞ்செய்திலேன் என்பதைக் கருத்துட்கொள்வாயாக" என்று சொன்ன சொல்லாற்றலுடையவனை வாலிக்கு இராமன் தகுந்த சமாதானம் கூறப்புகுந்தான்]

"சொற்றகை" என்றிங்குக் கம்பர் வாலியைப் புகழ்ந்தது சாலத் தகும். "வெற்றியுற்றதொர் வெற்றியினுய்" என்று வாலி இராமனை இச்செவ்வியில் அழைப்பதனுள் அடங்கிய குறிப்பு மிகவும் அருமையானது. எய்தவகையும் அதற்குரிய காரணமும் எவையேயாயினும் என்னை வென்றுவிட்டனை; மற்றென், ஆதலால் வெற்றியுடையவனுகிவிட்டாய்" என்னும் இது 'வல்லான் வகுத்ததே வாய்க்கால்' என்னும் தமிழ்வழக்கினேடு, 'nothing succeeds like success' என்னும் ஆங்கிலப் பழமொழியையும் ஒருங்கே நினைவூட்டவல்லதாகி நிற்கின்றது. வாலியின் சொற்றகை இதனேடு முடியவில்லை. இராமன் செய்தது நீதியன்றென அவன் வாதிக்குந் திறமை நனிமிக வியக்கத்தக்கதாயமைந்திருக்கின்றது. நீதி யென்பது, நிகழ்த்துவோர் நிகழ்த்தப்படுவோர் நிகழ்த்தும்வகை ஆகிய மூன்றையுஞ் சார்ந்ததொன்று. நிகழ்த்துதற்கு அதிகாரமில்லாதவர் நிகழ்த்துவதொன்று, தன்வரையில் நீதியேயாயினும், அநீதியேயாம். ஆகையாற்றுன், அவ்வதிகாரம் தனக்கு உளது என்பதைக் காட்டுதற்கு இராமன், "இப்போது உண்மையைக் கடைப்பிடித்து நேர்மையுடன் ஒழுகுந் தர்மாத்மாவும், தருமார்த்த காமங்களையறிந்தவருமாகிய பரதர் இவ்விராச்சியத்தைப் பரிபாலித்து நிக்கிரகானுக்கிரகம் செய்துவருகிறுர். நானும் மற்றைய அரசர்களும் பரதருடைய ஆணையை மேற்கொண்டு தருமத்தை நிலைபெறச்செய்ய உலகமெங்குஞ் சஞ்சரித்துவருகின்றேம். எங்களுக்கு விதிக்கப்பட்ட தருமத்தில் வழுவாமல் நின்று பரதருடைய கட்டளையைச் சிரமேற்கொண்டு நாங்கள், அறநெறி தப்பி நடப்பவர்களைச் சிக்ஷித்துவருகின்றேம்" என வான்மீகத்தில் அத்துணை முயன்று வற்புறுத்தினன். இவ்வாறு தனக்கு அதிகாரமுளதென்று வற்புறுத்துகிற வாசகங்களே அது இல்லையோவெனும் சந்தேகத்திற் கிடமாகுமாதலால் இக்கம்பர் நூலில் அன்னதொன்றும் இராமன் பேசாதா னயினன் போலும். மற்று, தம்பியும் தஞ்சமென் றடைந்தவனும் ஆகியவொருவனைக் கொல்லலுற்றதும் அவன் மனைவியைக் கைப்பற்றியதும் குற்றமாம் என்பது ஈரிடத்தும் எடுத்துக் கூறப்பெற்றது. இவைகளைப் போதிய அமைதியாகக்கொண்டு வாலி, வான்மீகத்தில், நீதியே தன்பால் செலுத்தப்பெற்றதென நினைத்து அடங்கி இராமனைப்பணிந்துவிட்டான். கம்பர் நூலிலோ அவன் அத்துணை விரைவில் அடங்கிவிடவில்லை. இராமன் சொற்களைப் பின்னுங் கூர்ந்து ஆராய்கின்றுன்.

அவரவர்க்குஉரியதென்று, தருமநூல்களாலேனும் அரச சட்டங்களா லேனும் விதிக்கப்பட்டிருக்கின்ற விதிகளினின்று விலகிச்செய்த செய்கைகளே தண்டனைக்கேற்ற குற்றங்களாம். எனின், குற்றம், செய்தோனது பிறப்பு நிலைமை நோக்கம் அனையவைகளைச்சார்ந்து நிற்கும். ஏழுவயதிற் குட்பட்ட சிறுவன் செய்ததொன்றும் குற்றமாகாதென்பது ஒரு விதி. போரின் இடையே கொல்வதொன்றுங் கொலைக்குற்றமாகாது. தாயின்உயிரைக் காக்கும்பொருட்டு வயிற்றிருந்த மகவைக்கொல்கின்ற மருத்துவன் கொலையாளியாகமாட்டான். மனைவியிருக்க வேறேர் மனைவியைமணம்புரிதல் இந்துக்கள் சட்டப்படி குற்றமற்றதாயினும் மேனுட்டோர் அது செய்யின் தண்டிக்கப்படுவார். ஆதலின், ஒருவன்பால் ஒரு நிலையில் செல்கின்ற சட்டம் எல்லாரிடத்தும் எல்லா நிலைமைகளிலும் செல்லத்தான் வேண்டுமென்ற நியதியில்லை. சனதன தர்மங்களெல்லாம் இந்தக்கொள்கையையே அடிப்படையாகக்கொண்டு அமைந்திருக்கின்றன.

இவ்விடங்களைநினைவிற்கொண்டு, இராமன் வாலியின்மீது ஏற்றுகின்ற குற்றத்தினை ஆராயுங்கால் அதனமைதியினைக் காண்பதோ அரியதாகி விடுகின்றது. "தருமம் இன்னதென்று எண்ணுமல் உன் தம்பியின் ஆருயிர்த் தேவியை எய்தினுய்; ஆகையால் உன் உயிரைப் பறித்தேன்" என்று நிற்கின்றது இராகவன்றன்

இறுதிவாக்கு. ஆம், மானுடதர்மமன்றே இது! விலங்கினத்திற்கு இவ்விதி யில்லையே; வாலி அதனைஎண்ணுங்கால் யாதுபிழை? வடமொழியில் இராமன் மனுதர்ம சாஸ்த்திரத்தையே மேற்கோளாக எடுத்துக் காட்டினன். மானவர்க்குரிய சட்டம் வானரர்க்கிடை எவ்வாறு செல்லும். மனித இனத்திற் குள்ளேயே, மனுநீதியை மகம்மதியருக்கும், மகம்மதியர் தருமத்தைஇந்துக்களுக்கும் ஏற்றிமதிக்க அதிகாரம்(Jurisdiction) இல்லாதபோது, மானுட தர்மத்தை, பிறப்புவகையிலேயே வேறுன அவ்வானரவாலியின்மீது சார்த்திக் குற்றமுங்கண்டு தண்டித்தும்விட்ட இராமன் என் நினைத்தான் என்செய்தானென்று, முதனூலில் பலபடபேசிய வாலி, வாதிக்க ஆற்றலற்றுப்போயினனேனும், அவன் தமிழில்வந்து கலந்தபின் தன் வாய்திறக்கப்பெற்று, "பிரமன் எங்களை எய்தின் எய்தியதாக இயற்றினனன்றி, மறைநெறிவந்தமணமுறை எங்களுக்கு இல்லையே. ஆகையால், குற்றமுற்றிலென் நீ அது கோடி" என்று அறையலுற்றுன். சட்டமே இவ்வகை முறைபிறழ்ந்து நடத்தப்பட்டதாதலின், அதன்படி விதித்த தண்டனையை மறைந்து நின்று நிறைவேற்றிய செய்தியை வாலி இனி ஒன்றுக மதித்தானல்லன். ஆதலாற்றுன், "நேருமன்று மறைந்துநிராயுதன் மார்பி னெய்யவோ" என்று முதன்முறையே கேட்ட கேள்வியை, அதற்கு இராமன் ஒன்றும் விடை யியம்பாமை கண்டும், மீண்டும் வாலி வற்புறுத்த நினைக்கவில்லை. அன்றியும், செய்கை யெதுவாயினும் அதற்குரிய தண்டனை எதுவாயினும், விசாரித்த பின்னன்றே, தீர்ப்பும் தண்டனையும் வருதல் வேண்டும். இராகவன் அரசியல் இயற்றும்முறை தலைகீழாக நிற்கின்றது. சுக்கிரீவன் வாதியாய் இகலிக் கூறியதையும் அவனைச் சார்ந்தவனுன அனுமனது சான்றையுங் கொண்டு, 'பிரதிவாதியை' யாதும்வினவாமல், அவன் தன்பக்கல் சிலகூறச் செவ்வியும் அளிக்காமல், தீர்ப்புக் கொடுத்து, அதனைத் தானே கொலையாளியாயும் நின்று நிறைவேற்றியும்விட்டனன் இராமன். அவசரமாகத் தூக்கிலிட்டுவிட்டுப் பிறகு சாவகாசமாக விசாரணை நடத்துமிக் கொள்கையை ஆங்கில நூலாசிரியர் ஸர் வால்டர் ஸ்காட் என்பவர் Jatwood Justice என்று அழைப்பார்.

நன்று; வாலி இவ்வாய்மையை வழங்கியபின்னும் இராமன் வாயிழந்து நின்றுனலன். வாலி வீசியவலையில் விழுகின்றுன் தயரதன் மதலை. "நீ குரங்காய்ப் பிறந்தனை யாயினும் மானுட சட்டவிதிகளின்படியே மதித்தற்குரியவன்" என வற்புறுத்திப் பல காரணங்களும் மேற்கோள்களும் எடுத்துக்காட்டப் புக்கனன்.

நலங்கொ டேவரிற் றேன்றி நவையறக்
கலங்க லாதற நன்னெறி காண்டலின்
விலங்க லாமை விளங்கிய தாதலான்
அலங்க லார்க்கி தடுப்பதன் றுமரோ

[சிறப்புடைய தேவர்களுக்குப் புதல்வர்களாய்ப் பிறந்து குற்றமில்லாவகை, கலங்காத அறநெறியை நீங்கள் கண்டிருத்தலால், நீங்கள் விலங்குகள் ஆகாமை விளங்குகின்றது. ஆகையால் மாலையணிந்த வீரர்களாகிய உங்களுக்கு இக்காரியம் தகுவது அன்று]

பொறியின் யாக்கை யதோபுல னேக்கிய
அறிவின் மேலதன் றேவறத் தாறுதான்
நெறியி னேண்மையை நேர்நின் றுணர்ந்தநீ
பெறுதி யோபிழை யுற்றுறு பெற்றிதான்.

[தருமமார்க்கத்தைக் கடைபிடித் தொழுகுதலானது, ஐம்பொறிகளுக்கு இடமான உடலைப் பற்றியதோ? அப்புலன்களின் வழியாய் விடயங்களை ஆராய்கின்றஅறிவைச் சார்ந்ததன்றே அது! நன்னெறியின் மேன்மையை நேராக அறிந்துநின்ற நீ, பிழைகள் செய்யுந் தன்மையை, வானரம் என்ற உருவத்தினுலே, பெற்றவ னுவாயோ]

மாடு பற்றி யிடங்கர் வலித்திடக்
கோடு பற்றிய கொற்றவற் கூயதோர்
பாடு பெற்ற வுணர்வின் பயத்தினுல்
வீடு பெற்ற விலங்கும் விலங்கரோ

[முதலையானது தன்னை ஒரு பக்கத்தில் பிடித்து இழுக்க, சங்கு ஏந்திய வெற்றியனை திருமாலைக் கூவியழைத்ததாகிய ஒரு பெருமைவாய்ந்த அறிவின்பயனுல் விடுபட்டு முத்தியடைந்த யானையாகிய கஜேந்திரனும் ஒருவிலங்கே யன்றே]

சிந்தை நல்லறத் தின்வழிச் சேர்தலாற்
பைந்தொ டித்திரு வின்பரி வாற்றுவான்
வெந்தொ ழிற்றிறல் வீடுபெற் றெய்திய
வெந்தை யும்மெரு வைக்கா சல்லனே.

[நல்ல அறநெறியில் மனம் சென்றதால், பசுமையான வளையை அணிந்துள்ள திருமகள் அனைய சீதையின் துன்பத்தைத் தீர்க்கும்பொருட்டு, கொடிய தன் போர்த்தொழில் திறமையைக் காட்டிப் பரமபதம் சேர்ந்தடைந்த எனது பெரிய தந்தையாகிய ஜடாயுவும் கழுகுகளுக்கு அரசனே அன்றே]

நன்றி தீதென் றியலெரி நல்லறி
வின்றி வாழ்வதன் றேவிலங் கின்னிடை
நின்ற நன்னெறி நீயறி யாநெறி
ஒன்று மின்மையுன் வாய்மை யுணர்த்துமால்

[இன்னது நல்லதென்றும் இன்னது கெட்டதென்றும் அதனதன் தன்மைகளைத் தெரிந்துகொள்கின்ற நல்ல பகுத்தறிவு இல்லாமல் வாழ்வதன்றே விலங்குகளுக்கும் மனிதர்களுக்கும் இடையே உள்ள வேறுபாடு. நிலைபெற்ற நன்னெறியில் நீ யறியாத நெறி ஒன்றுமில்லை என்பதை இப்பொழுது உன் வாயிலிருந்து வந்த சொற்களே தெரிவிக்கும்]

தக்க வின்ன தகாதன வின்னவென்
றொக்க வுன்னல ராயி னுயர்ந்துள
மக்க ளும்விலங் கேமனு வின்னெறி
புக்க வேலவ் விலங்கும்புத் தேளிரே.

[தகுதியானவை இவை, தகுதி யல்லாதவை இவை என்று நேராக நினைக்காதவராயின் உயர்ந்தவர்களும் விலங்குக்குச் சமானமே. மற்று, விலங்காயினும் மனுதர்ம முறையை மேற்கொண்டு ஒழுகுமானுல் அவ்விலங்குகளும் தேவர்களுக்குச் சமானமானவைகளே]

கால னுற்றல் கடிந்த கணிச்சியான்
பாலி னுற்றிய பத்தி பயத்தலான்
மாலி னுற்றரு வன்பெரும் பூதங்க
ளாலி னுற்றலு மாற்றுதி நண்ணினுய்

[யமனது வலியைஅழித்த சிவபிரானிடத்தில் நீசெய்த பக்தி பயன்தந்ததால், திருமால் படைத்த பெரிய பூதங்கள் நான்கிற்கு உள்ள வலிமையையும் போக்கும்படியான திறமையைப் பெற்றுய்]

மேவ ருந்தரு மத்துறைமேவினு
ரேவ ரும்பவத் தாலிழிந் தோர்களுந்
தாவ ருந்தவ ரும்பல தன்மைசால்
தேவ ரும்முளர் தீமை திருந்தினர்

[குற்ற முடையவர்களா யிருந்தவர்களிலும், பிறப்பினுல் தாழ்ந்தவர்களிலும், சேர்வதற்கு அரிய தருமமார்க்கத்தில்

சேர்ந்து நடந்தவர்களும் உளர். அப்படியே, குற்றமில்லாத தவசிகளிலும், பற்பல குணங்கள் சிறந்த தேவர்களிலும் தீமை செய்தவர்களும் உளர்]

இனைய தாதலி னெக்குலத் தியாவர்க்கும்
வினையி னால்வரு மேன்மையுங் கீழ்மையும்
அனைய தன்மைய றிந்தும ழித்தனை
மனையின் மாட்சியென் றான்மனு நீதியான்

[உண்மை இவ்வாறு இருப்பதால், எந்தக் குலத்தில் பிறந்த எவர்க்கும், மேன்மையும் தாழ்மையும் அவரவர் செய்யும் செயல்களாலேயே வரும். அதனை நீ உணர்ந்திருந்தும் அயலான்மனைவியின் பெருமையைச்சிதைத்தாய் —என்று மனுநீதியறிந்த இராமபிரான் கூறினான்]

"மனுநீதியான்" என்று இராமனை அழைத்திங்கு அவன் வாசகத்தை முடித்திருப்பது, உண்மைப் புகழ்ச்சியோ அல்லது குறிப்புமொழியோ என உணரமாட்டா மயக்கத்தை விளைத்து நிற்கின்றது. வான்மீகத்தினின்று தான் அறிந்துகொண்ட மனுநீதியையே இராமன் பேசுகின்றானன்றி, வாலியின் வாதத்திற்கு ஐயமறப் பொருந்தத்தக்க அமைதியொன்றும் ஏழை இராமன் இயம்பமாட்டாமல் உரைபெருக்கி உழக்குகின்றான் என்னக் கம்பரே மதித்தனர் என்று எண்ணவேண்டியிருக்கின்றது. "நன்னெறி நீ யறியாநெறி ஒன்றுமின்மை உன்வாய்மை யுணர்த்தும்; ஆதலின் நீ மனிதனாகவேபாவித்துத் தண்டிப்பதற்குஉரியவன்" என்பது வியப்புற நிற்கின்றது. கிறிஸ்தவசமய நெறிகளையறிந்துள வொருவனை, அவன் இந்துவாயினும், கிறிஸ்தவனே என்பதுபோலாம் இது. விலங்கிற்கும் மனிதனுக்கும் இடையே இவ்வேற்றுமை பின்னும் அகல்கின்றது. "மனுவின் நெறி புக்கவேல் விலங்கும் புத்தேளிரே" என்னுங்கால் குடிபுகுசட்டம் (Law of Domicile) கூறப்பெறுகின்றதோ யாதோ! விலங்குகளுக்கும் மனிதருக்கும் இடையே இச்சட்டம் நடைபெற இயலுமென்று ஆயிரம் மனுக்களும் அறிந்திருக்கமாட்டார். கஜேந்திரனும் ஜடாயுவும் எதற்கு மேற்கோள் என்பது விளங்கவில்லை. மனுவின்நெறி அவை புக்கு அதனால் அந்நீதியே செலுத்தப்பெற்றன என்று எவ்வாற்றானும் எண்ண இயலாது. இப்படி, எல்லாவற்றையும் எடுத்து நோக்குங்கால் இராமன் முன் நினைத்துச் செய்தது ஒன்றாகியும் இப்பொழுது பலபடப்பேசுவது முற்றிலும் வேறாகியும் அமைகிறதென்பதில் யாதும் ஐயமில்லை.

ஏனெனில், ஒருவன் பேசும் சொற்கள் பொய்க்கலாம், மற்று அவன்செய்த செய்கையோ வாய்மையைக் காட்டிவிடும். வான்மீகத்தில் வந்த இராமன் தன் செயல்வேறு சொல்வேறு ஆவதைத் தானேவிளம்பிவிட்டான். "வாலியே, நீ மனுநெறி பிறழ்ந்தாய்; நீ விலங்காகையால் நான் மறைந்து கொன்றேன்" என்று ஒன்றொன்றோடொவ்வாமல் இராமன் கழறினானேனும் ஆவியோடு அறிவும் அழிந்த அவ்வாலி இதனுள்ளடங்கிய முரணைக்காணமாட்டாமல், "ஐயனே, நீ நீதியே நிகழ்த்தினாய், புல்லனேன் நான் புந்தியின்றிப் புகன்ற சில சொற்களைப் பொறுத்தருள்க" என்று அங்கு அடங்கிய பரிசு இங்கு நிகழாமல், "நீ பிறப்பில் விலங்காயினும், இவ்விந்தக் காரணங்களால் உன்னை மனிதனென்றே நான் பாவித்துத் தண்டித்தேன்" என்று இராமன் கூறவும்,

அவ்வுரை யமையக் கேட்ட
வரிகுலத் தரசு மாண்ட
செவ்வியோ யனைய தாகச்
செருக்களத் துருத்தெய் யாதே
வெவ்விய புளிஞ ரென்ன
விலங்கியே மறைந்து வில்லா
லெவ்விய தென்னை யென்றா
னிலக்குவ னியம்ப லுற்றான்

[அந்த வார்த்தைகளைப் பொருந்தக்கேட்ட குரங்கினத்துத் தலைவனான வாலியும், "மாட்சிமைப்பட்டசெம்மையுடையவனே, அப்படியானால், போர்க்களத்தில் என் முன்தோன்றி அம்பு எய்யாமல், கொடிய வேடர்களைப் போல விலகி மறைந்துநின்று வில்லால் என்மேல் அம்பு ஏவியது என்ன காரணத்தாலோ" என்று வினவினான். அதற்கு இலக்ஷ்மணன் விடைகூறத் தொடங்கினான்]

இராமன் வாயிழந்து நின்றமையால், உடுக்கையிழந்தவன் கைபோல இலக்குவன் இடைவந்து இயம்பலுற்றான் என்பதில் ஐயம் இல்லை.

கர்ணன் மாண்பு

[572 பக்கத் தொடர்ச்சி]

சென்ற இதழ்களில் கன்னனது செருக்கினையும் மற்றும் குணக்குறைபாடுகளையும் சிறிது விரிவாக எடுத்துரைத்தேன். இதுவரையில் படித்தவர், 'கன்னனது குணமேம்பாடுகளாகிய அவனது ஈகை செய்ந்நன்றி முதலியவற்றைப்பற்றி ஒரு சொல்லேனும் காணோமே; அவைகளை நீர் அறியீரோ! குந்திக்கு வரமளித்தமை முதலிய பாகங்களை நீர் மறந்தீரா?' என்று கேட்கலாம். அக் கேள்வியேஅடியாக யானும் ஒன்று திருப்பிக் கேட்கலாமே. பயந்த மாது மகனிடம் வரம் பெற்றமை முதலிய செய்திகளைப் பாரதத்தில் கண்ணனைத் தவிர யாவரறிவார் என்று நான் கேட்கக்கூடும். அவையெல்லாம் அவனது வாழ்க்கை மர்மம். அம்மர்மம் வெளியானது வாழ்க்கை முடிவிலோ அல்லது வேறொரு அரிய சந்தர்ப்பத்திலேயோ ஆகும். மனித வாழ்க்கையில் நாம் சில மனிதர்களின் புறவியல்புகளைக் கண்டு நகைக்கின்றோம். ஆனால் ஓரோர் சந்தர்ப்பங்களில் அவர்களது வாழ்க்கை மர்மம் வெளியாகி, அபாரமான துயரமும் விரதமும் மனப்பான்மையும் கிடந்த கிடக்கையைக்கண்டுபெருமூச்செறிகின்றோம். கன்னன் வாழ்க்கையு மத்தகையதே. துரியோதனன் சபையிலுள்ளவர், அவனைப்பற்றிக் கருதியதென்னவெனில், அவன் வில்லில் வல்லவனென்றும், ஆனால் யாவரினும் சிறந்த வில்லாளி யல்லனென்பதும், எனினும் மிகுந்த செருக்குடையவனென்பதும், ஆதலின் இகழ்ச்சிக்குக்குரியனென்பதுமேயாகும். இவர்களது கூற்று உண்மையென்பதில் ஐயமில்லை. ஆனால் இவைகள்மட்டுமே முழு உண்மையு மாகாது. அம் முழு உண்மையையும் நிலைநிறுத்தவேண்டி, பாரத ஆசிரியன் இத்தகைய புறவியல்புகளால் கன்னது உருவத்தைச் சித்தரித்து, பிறகு உயிர்உண்டாக்கும் வண்ணம் உள்

ளே பாய்ந்து இதயத்தையும் சிருட்டிசெய்கின்றான்.

அவனது சில அற்பகுணங்களுக்கு மாறாக விளங்கும் பெருந்தகைமையை நாம் அறிவது ஓர் அரிய மாண்புடை நாளிலேயாகும். சுயோதனனது சபையில் மல்லரையிறுத்து விசுவரூபம் கொண்டு எவ்வுலகும் திருவடியில் மறைந்திட நின்ற பரமாத்மனைக் கண்ணுற்றுக் கன்னன்,

செங்கை குவித்த சிரத்தின னாயுணர்
வொன்றிய சிந்தைய னாய்ப்

பணிந்தனன். ஒரு வகையில் தன் கொள்கையையே மாற்றிக்கொண்டான் எனலாம்; அல்லது இல்லாத கொள்கையை மேற்கொண்டான் என்றும் கூறலாம். கண்ணனைத் திருமாலென்றே கண்டான். பின்னும் பாண்டவர் வெற்றியடைவது திண்ணமெனவும் தான் சண்டைசெய்வது தோல்வியின் பக்கலில் என்றும்உணர்ந்தான். 'பழிதீர்வென்றிப் பாண்டவர்' என்றும் கூறுகிறான்.

பிறகு, இந்திரன் வந்து கவசகுண்டலங்களை யிரந்தபோது அசரீரி தடுத்தும்,

சிந்தையின்கண் ஓர் கலக்கமற் றளித்தனன்
செஞ்சுடர்த் தினகரன் சிறுவன்

இன்னவனதுமனச்சந்துஷ்டியும்,பெருந்தன்மையும், பின்னும் வருணிக்கப் போகாது. பிறகு'பயந்தமாது' வந்துவரங்கேட்டபோதுதான் அவன்வாழ்க்கையின் துயரமும் விரதமும் பேராண்மையும் நன்கு துலங்கக் காணலாம். குந்திதேவி, 'படாமது எடுத்துப் பிரித்துப் போர்த்து அவனெதிர் ஈன்றதாயாமென இருந்ததும்' அவனது கட்டமைந்த உடலெல்லாம் பொங்க அவனது இதயத்தின் ஆழ்ந்த உணர்ச்சிகள், உரையினால் விடுபெறாமல் தத்தளிக்க

பெற்றாநீர் மகவன் பிலாமையோ அன்றிப்
பெரும்பழி நாணியோ விடுத்தீர்

என்று, தாயன் பில்லாமல் கழிந்த தன் சிறு பருவத்தின் துயரத்தைச் சிறிதேவெளியிட்டான். மனித வர்க்கத்தின் அடிப்படையான உணர்ச்சிகள் மாறுமோ! தன் சொல்லுக்கெல்லாம் யாவரிடத்தும் இகழ்ச்சியான எதிர்ச்சொல்லே பெறுகின்ற கன்னன் இங்கு, மறுமொழி பகரமுடியாத எத்தகையவொரு சொல்லை ஊடுருவப் புகல்கின்றான் கேண்மின்!

இனி, குந்தியினது மற்றைய வாசகங்களெல்லாம் நமக்கு அவசியமல்ல; அவன் வரமீந்தவிதமும் நாம் கண்டு வியத்தற்கு உரியதன்று. கண்ணனது உரை ஒன்றையே கொண்டு, குணவன்மை யில்லாமல், அவள் அவனை வரம்கேட்பதும், அவன் கொடுப்பதும், அவனது தாயன்பினையே காட்டுவதாகும். கன்னன் முடிவாகக் கூறும் உரை எவ்வுள்ளத்தையும் விள்ளத்தக்கது. தான் இறந்தபோது முலைப்பாலருளவேண்டுமென்று,

பெருவா மிரண்டும் பெற்றபின் தன்னைப்
பெற்ற பாவையைக் கரம்குவித்துத்
தருவா மெனக்கு மிரண்டுள உலகிற்
சராச ரங்களுக்கெல்லாம் தாயீர்
வெருவரு மமரில் பார்த்தனால் அடியேன்
வீழ்ந்தபோ தவனிப ரறிய
மருவரு முலைப்பா லெனக்களித் தந்தம்
மகனெனும் வாய்மையு முரைப்பீர்!

என்று இவன் கூறியது எல்லாம் துறந்து கடவுளைச் சரணமாக அடைந்த அடியார்களின் வாக்கினை அடியொற்றியிருக்கின்றது. கைகுவித்தலும் 'அடியேன்' முதலிய வினயச்சொற்களும் நிற்க 'உலகிற் சராசரங்களுக்கெல்லாம் தாயீர்' என்று தாயினிடம் இருந்த பக்திவெள்ளம் கண்ணில் வழிய, குணவன்மையில்லாதவொரு பேதைமைமிகுந்த தனது தாயினை உலக மாதாவாகப் பாவித்ததுதானென்னே! இவனது தாயன்பும், எல்லாவுயிர்களிடத்தும் விளங்கும் தாயன்பாகிய ஆகாயத்தில் இரண்டறக் கலந்து மறைகிறது. கடைசியிரண்டடிகள், இறந்த வாழ்க்கையை மீண்டும் வாழவேண்டும்என்று விதியின்செயலுடன் முரணும் வீண் அவாவினைக் குறிப்பன.

இனிக் கன்னன் வாழ்க்கையில் முடிவாகக் கருதவேண்டிய தொன்றைக் கருதுவோம். பாரதஅரங்கத்தில் அவன் ஆடிய பாகம் என்னவென்பதை ஆராய்தல்வேண்டும். துரியோதனனுக்குத்துணைவனாயமர்ந்து அதர்மத்தின் பக்கலில் போர் புரிகின்றான். அப்படிப் புரிந்து என்னதான் ஆற்றினான் என்பதைக் கருதப்புகுங்கால், சிலர், துரியோதனனுக்காக இவன் ஆற்றிய அருஞ்செயல்கள் அளவிறந்தன என்பர். ஆயினும், அக்கூற்றில் உண்மையோ மிகுதியும் இல்லை என்றே தோன்றுகிறது. முதலில் இவன் என்னென்னசெயல்கள் ஆற்றவில்லை என்பதை எளிதில் எடுத்துரைக்கவேண்டியிருக்க, என்ன ஆற்றினான் என்பதைப் பின்னால் கருதுவோம். தன் அரசனை அந்தரசரிதர் கொண்டேகியபோது, தடுத்து மீட்டனனா? தடுத்து மீட்ட பெருமையைக் கிரீடியன்றோ கொண்டுபோனான்? பெருந் துணைவனாயமர்ந்தும், அரசனைப் பகைவரிடமிருந்து மீட்கவியலாத இக்கன்னனது விற்றிறல்தான் எற்றுக்கோ? அன்னதன்பிறகு, நிறைமீட்சிச்சருக்கத்தில்; அரசன் உற்றதோல்வியைத் தனது வீரத்தினால்அகற்றினனா? வேறு எதுதான் தன் துணை அரசனுக்குப்பயனான காரியம் இயற்றினானோ அறியோம். பிறகு, போர் நடக்கையில் அபிமன்னனை இவன் சிலைபழித்தான். கடோற்கசனை வேலால் மடித்தான்; இவ்விரு செயல்களும் மதிப்புக்குரியனவேயாகும். ஆனால் அபிமன்யு சிலையழிந்தவுடனே இறந்தனனா? சிலையழிந்ததனால் இறந்தனனா? என்பதையுங் கருதவேண்டும். முதலில் அவனைக் கொன்றைத் தொடையலால் வளைத்தும் அடிக்கடி அவன்மாட்டு வீரரைச்செலுத்தியும், பின் சயத்திரனது தண்டத்தாலன்றோ அபிமன்யுவைத் துரியோதனன் கொன்று குவித்தது? கடோற்கசனையும் கொன்றான். எவ்வாறெனில், விசயனைக் கொல்லத்தக்கத் தனது ஒப்பற்ற பலத்தைச் சொல்லாற்றாமல், இழந்தானன்றோ? இவ்விரண்டிடங்களில் தவிர வேறெங்கும் இவன் இராசராசனுக்குப் பயன்படவில்லையென்பதை நாம் கருதவேண்டும்.

இப்படி அரசனுக்குப் பயன்படாததற்குக் காரணமென்னவென்பதைப் பார்ப்போம். முதலாவதாக இவன் விசயன் முதலியோரைப்போல் விற்றிறலுடையோனல்லன். ஆதலின் அவர்களை வெல்லாதது வியப்

பன்று. ஆனல், முக்கியமான காரணம் என்னவென்னில், இவன் துரியோதனனுக்கு நண்பனேனும், வீடுமனைப் போல் தனது எல்லாவற்றையும், உடல் பொருள் ஆவி அனைத்தையும், துரியோதனனிடம் ஒப்படைத்தவனல்லன். உதாரணமாக வீடுமன் சுவேதனைச் சூதினல் மாய்த்ததுபோல, கன்னன் அதருமப்போர் என்றும் புரிந்ததில்லை. இரண்டாவதாக இவன் வண்மையினல் தனது வரங்களைத் தானம் செய்துவிட்டான். இதனல், இவன் தீமைக்குத் தனது ஆவியை விற்றுவிடவில்லை என்னும் உண்மையை நாம் கூர்ந்து நோக்கவேண்டும். சுயோதனனுக்குச்சொல்லாலும்செயலாலும் ஒரு சிறிது உதவி புரிந்தாலும், இவன் பெரும்பாலும்தன்னுலகமாகவேயிருந்து தான்நன்றெனஎண்ணிய கொள்கைகளையே வழுவாமற் கடைபிடித்தான். ஆனல் துரோணனைப்போல் இவன் பாண்டவர்களைத் தருமசொரூபிகள் என்று கருதவில்லை. துரோணன் தருமனுக்காகத் தன் உயிரைநீத்து வான் புகழ் கொண்டனன். அதைப் போலவே கன்னனும் அவர்களைத் தருமத்தின்சார்பாக நின்றவர்களெனக் கருதியிருந்தானேல் துரோணனைப் போலவே செய்திருப்பான் என்று நாம் துணியலாம். ஆனல் இவனுக்குப் பாண்டவரிடம் சுயோதனன் பொருட்டேயல்லாமல் இயற்கையாக வேறு துவேஷமிருந்ததென்பதையும்நோக்கவேண்டும். அதற்குப்பலகாரணங்கள் உள. சிறுவயதில் துரோணர் தனக்குக் கல்வி அளிக்க மறுத்தது; வித்தை பயிலும் அரங்கத்தில் சூதன்மகனுடன் போரிடேன் என்று அருச்சுனன் கழறியது; 'மடவரலை வேட்டபோது' அவள் 'சூதன் மகனுக்கு மாலையிடே னென்றது', பின் அவன் கண்ணெதிரே அருச்சுனன் பாஞ்சாலியைக் கொண்டேகியது; மற்றும் பலவற்றால் விளைந்த ஒரு விரோதமாம். ஆதலின் பாண்டவர்கள் தருமத்தின்சார்பாக நின்றவர் என்று அவர்களைக் கருத இவனல் இயல்வதில்லை. கண்ணனிடம் உரையாடும்போது "பழிதீர்வென்றிப்பாண்டவர்'' என்றுரைப்பானேயொழிய "அறங்கூர் வென்றிப் பாண்டவர்'' என்று கூறுன்.

வீடுமனது சபதத்தினல் பிறந்தது பாரதக் கதை முழுதும். கண்ணன் இல்லாவிட்டால் பாரதக் கதையில்லை; துரியோதனனே அறத்திற் கெதிராக மும்முரப்போர் விளைத்து அழிந்த மாண்பினையுடைய கதாநாயகன்; தருமனது அறமன்றே பாரதத்தில் காப்பாற்றப்பட்டது? இப்படியிவர்களாலேயே பாரதநாடகம் ஆக்கப்பட்டிருக்கிறது. ஆனல் கன்னனல் பாரதத்தில் விளைந்தது யாது? தருமன் வீடுமன் முதலியோரைப்போல் குணவிசேஷங்கள் உடையோனெனினும், திகழ்ந்து மிளிர்ந்து பொலிந்தொலித்துப் பாரதத்தில் தான் வாழ்ந்தசின்னங்கள்யாதும்இல்லாமல் மறைந்து ஊமனர்கண்ட கனவிலும் பழுதாயொழிகின்றுன்.

முற்றிற்று.

தமிழ்ப்பாடம் 138.

நைடதம்—நளன்தூதுப் படலம்

[581-வது பக்கத் தொடர்ச்சி]

மண்ணினிற் சிறந்து வாழு
மன்பதைத் தொகுதி தன்னி
லெண்ணிடிற் சிறந்தா ரன்றே
வியக்கரவ் வியக்கர் தம்மில்
விண்ணவர் சிறந்தா ரன்றே
விண்ணவர் தமையு மாளு
மண்ணனின் னேவல் கேட்பி
னதனினுஞ் சிறந்த துண்டோ. 51.

உரை). எண்ணிடில் - யோசிக்குமிடத்து, மண்ணி) - இம்மண்ணுலகில், சிறந்து வாழும் - சிருஷ்டியில் உயர்ந்ததாய் வாழ்கின்ற, மன்பதைத் தொகுதி தன்னில்-மக்கள்தொகுதியைக்காட்டிலும், இயக்கர் - இயக்கரினத்தவர், சிறந்தார் அன்றே - சிறந்தவர்கள் அல்லரோ; அ இயக்கர்தம்மில்-அந்த இயக்கர்களைக் காட்டிலும்,விண்ணவர்-வானுலகத்தாரானதேவர்கள், சிறந்தார் அன்றே -சிறந்தவர்கள் அல்லரோ; விண்ணவர் தமையும் - அந்த வானுலகத்தாரையே, ஆளும் - ஆள்கின்ற, அண்ணல் - தேவேந்திரனே, நின் ஏவல் - உனதுஏவலை, கேட்பின் - கேட்பானனல், அதனினும் சிறந்தது - அதைக்காட்டிலும் சிறப்புடையது, உண்டோ - வேறு ஒன்று உண்டோ. (உணர்).

விரிவுரை:—"மக்களைவிட யக்ஷர்களும், யக்ஷரைவிடத் தேவர்களும், அத்தேவர்களைவிட அவர் தலைவனை இந்திரனும், அவ்விந்திரனையே ஏவல்கொள்ள நிற்கின்ற நீயும்படிப்படியாய் உயர்ந்தவர்களாகின்றீர்'' என்னுமிது மேன்மேலுயர்ச்சியணி. (6—647,873)

தாதொடு நறவு தூற்றுந்
தருநிழ லினிது வைகி
மேதகு நிதியு மானும்
வேட்டன வுவந்து நல்க
வேதமி லரம்பை மாதர்
முறைமுறை யேவல் கேட்ப
நீதொழு மமரர் யாரு
நிற்றொழப் பணித்தி யென்றுள். 52.

(உரை). தாதொடு-மகரந்தப்பொடிகளோடு, நறவு-தேனையும், தூற்றும் - சொரிகின்ற, தருநிழல் - கற்பகத்தருவின் நிழலில், இனிது வைகி - இனிதுஅமர்ந்து, மேதகு - பெருமைதங்கிய, நிதியும் - சங்கநிதி பதுமநிதிகளும், ஆனும் - காமதேனுவும், வேட்டன- நீ விரும்பியவற்றை, உவந்து நல்க - மகிழ்ச்சியுடன் கொடுக்கவும்; ஏதம் இல் அரம்பை மாதர்-குற்றமில்லாத தெய்வப்பெண்கள், முறைமுறை ஏவல்கேட்ப-முறையே நீ இட்ட பணிகளைச் செய்யவும், (வீற்றிருந்து) நீ தொழும் அமரர் யாரும்- நீ இப்பொழுது வணங்கிவருகின்ற தேவர் அனைவரும், நின்தொழ - இனி உன்னை வணங்கும்படி,பணித்தி-ஏவுவாய்,என்றுள் - என்று தமயந்திக்கு அந்தத்தூதி சொன்னுள்.

விரிவுரை:—இந்திரனுடைய தூதி தன் செய்தியை மிக்க நயமுந் திறமையும் வாய்ந்தசொற்களால்இயம்புகின்றுள். 'வானவர்க் கிறைவனை நீ மணத்தல் வேண்டுமென்று', அவள் வெள்ளையாய் எடுத்தியம்பாமல் அப்பொருள் பயக்கும்படி வேறுவேறு யாதோ விளம்புவாளாகின்றுள்."உருவிலான்செய்யும் பகையினின்று இந்திரனை நீ காத்தல்வேண்டும்'' என்றும், "தேவர்கள் இக்குக்கடல் கடைந்து வருந்தாவண்ணம் அவர்களை நீ அளிக்கவேண்டும்'' என்றும், "பொன்னுலகச் செல்வத்தை நீ எய்தவேண்டும்'' என்றும்,"இந்திரனை நீ ஏவல் கொள்வாய்'' என்றும், "தேவர்களெல்லாம் நின்று உன்னைத் தொழும்படிசெய்ய எனக்குக் கட்டளையிடுவாய்'' என்றும் பலவாறு பகர்ந்தவைகளின் பொருள்களையெல்லாம் நோக்குங்கால் அந்தத்தில் அவையனைத்தும், "நீ யுன் சுயம்வரமாலையை இந்திரனுக்கே சூட்டுவாய்'' என வேண்டுவதாய் முடிகின்றன. இவ்வண்ணம் ஒன்றினை இயம்புவதுபோல் வேறென்று பயக்கும்படி சொல்வது பிறிதினவிற்சியணியாகும். வடமொழியில் இது பரியாயோக்தாலங்காரம் எனப்படும். இங்கு, "நீ தொழும் அமரர்யாரும் நிற்றொழப் பணித்தி'' என வேண்டுமாற்றல் "நீ இந்திரனை மணந்துகொள்'' என்னும் பொருளைக் குறிப்பதனினும் சிறந்த செவ்வி இவ்வணிக்கு நேர்தலிது.

என்னுளத் தென்று நீங்கா
திருப்பவ னளனே யாகும்
பொன்னகர்க் கிறைவன் றன்பால்
பொருந்துதி யென்னுந் தூதுக்
கன்னவ னியையுங் கொல்லோ
வெனமறைந் தயலே நிற்கும்
மன்னவன் மகிழ்ச்சி கூர
மடவர லினிது சொன்னுள். 53.

(உரை.) என்றும் - எப்பொழுதும், என் உள்ளத்து - என் மனதில்,நீங்காது இருப்பவன்-நிலைத்து இருப்பவன், நளனேயாகும் - நளசக்ரவர்த்தியே யாவான்; பொன்னகர்க்கு இறைவன்தன்பால் - பொன்னுலகத்திற்கு அரசனை இந்திரனிடத்து, பொருந்துதி-நீபொருந்துவாய், என்னும் தூதுக்கு - என்று நீ சொல்லும் தூதிற்கு, அன்னவன் - அந்த நளமகாராஜன், இயையும் கொல்லோ-சம்மதிப்பானே?என- என்று, மறைந்து அயலே நிற்கும் - உருக்கரந்து அயலில் இருக்கும், மன்னவன் - நளன், மகிழ்ச்சிகூர - மிக்க மகிழ்ச்சியடைய, மடவரல் - தமயந்தி, இனிது சொன்னுள் - செவ்வனே பதில் உரைத்தாள்.

விரிவுரை:—கூர என்னும் வினை யெச்சம் இங்கு (நெல்விளைய மழை பெய்தது என்பதுபோல்) காரியப்பொருளில் வந்திருக்கின்றது. தமயந்தி சொன்னதைக்கேட்ட நளன் மகிழ்ச்சியடைந்தான். தன்னையே விழைந்திருக்கின்றுள் என்ற உறுதியைக்கேட்டதால் உண்டான மகிழ்ச்சியோடு, அவள் இந்திரனை மணக்க இசையாமையைத் தெரிவித்த சொற்களின் அமைதியினழகும் நளனதுமனதைப்பெரிதும்மகிழ்வித்திருக்கும். "இந்திரனே என்னை ஆதரித்து வேண்டுகின்றுனென்றல் அடியேன் யான் அவனை மறுக்க வொண்ணுமோ. எனினும் உன் தூதிற்கு இயையவேண்டிய என் மனத்தின்கண் இறையும் விட்டகலாமல் தங்கியிருக்கின்றுன் நளன். ஆதலின் அவனது அநுமதியின்றி என்மனம்இந்திரனைமணப்பதற்குஇணங்குவதென்பது இயலாதகாரியம். அந்நளனே ஒருபோதும் அநுமதிகொடுக்கமாட்டான்.........யான் என் செய்வேன்'' என "நளன் இயையமாட்டான்'' என்னும் வாசகத்தால் தான் இணங்கவில்லை என்னும் பொருளைக்குறிக்கும் இதுவும் பிறிதினவிற்சியணியாகும்.

பாசிழைப் பரந்த வல்குற்
பனிமொழிக் குமுதச் செவ்வாய்
மாசறு மதிய மன்ன
வாண்முகத் தணங்கை நோக்கி
யாசையங் கடலு ளாழ்ந்து
கரைபெறு வரச னேக்க
மேசுவ தொன்று மில்லா
முலைவரை யிவர்ந்த வன்றே. 54.

(உரை.) பாசு இழை - பசும்பொன்னல் ஆன ஆபரணங்கள், பரந்த - தழுவப்பெற்ற, அல்குல் - அல்குலையும், பனிமொழி - குளிர்ச்சிபொருந்திய சொல்லையும், குமுதச் செவ்வாய்-குமுதமலர்போன்ற சிவந்த வாயையும் உடைய, மாசு அறு-குற்றமில்லாத, மதியம் அன்ன - சந்திரன் போன்ற, வாள் முகத்து அணங்கை - ஒளிபொருந்திய முகத்தை உடைய தமயந்தியை, நோக்கி - பார்த்து, (நளன்) ஆசை அம் கடலுள் ஆழ்ந்து - ஆசையாகிய அழகிய கடலில் வீழ்ந்து, கரைபெறு - கரைசேர இயலாத, அரசன் நோக்கம் - நளனுடைய கண்கள், ஏசுவது ஒன்றும் இல்லா - பழிக்கப்படுபவதற் கொன்றுமிலாத, முலைவரை-முலைகளாகிய மலையின்மேல், இவர்ந்த - ஏறிக்கொண்டன.

விரிவுரை:—வரும் வழியில் எதிர்ப்பட்ட மாதர்களைக் காண்டலுங்கூடாதென்று கண்முகிழ்த்துவந்த நளமகாராசன் தான் இந்திரனுக்குத் தூதனேயாய்ப் போந்தமுறைமையை உன்னித் தமயந்தியை இதுகாறும் நோக்கிமகிழும் நினைவை யொழித்திருந்தனன். இந்திரன் தூதிக்குத் தமயந்தி உரைத்த எதிர்மாற்றத்தால் அவள் தனக்கேஉரியகாதலியாய் நிற்கின்றஉறுதி ஏற்பட்ட பிறகு, அவள் பாதத்தில் செலுத்தியிருந்த தன் பார்வையை நிமிர்க்கலானன். நிமிர்ந்து பார்த்து வருகையில்அவள்முலைகளின் அழகைக்கடந்து அவன் கண்கள் செல்லாமல்நின்றுவிட்டன. இதனை, ஆசையாகிய கடலில் ஆழ்ந்தவன் முலையாகிய மலையில் ஏறினன் என முரண்பட விளம்புகின்றுர் கவி. அல்லது 'முலைவரை,' என்பதற்கு முலையினளவே அவன் கண்கள் ஏறின என்றுங் கொள்ளலாம்.

வடிவமை நூலிற் சொல்லும்
வனப்பெலா மமைத்து வேதன்
கடிமலர்ச் செங்கை வண்ணங்
காட்டிய வுருவு கொல்லோ
வடுகணை வேனி லானின்
னமுதுகோ ரேய்த்துத் தீட்டும்
படிவமோ வுயிரை வாட்டும்
பாவைதன் வடிவந் தானே. 55.

(உரை). உயிரை வாட்டும் - தன் உயிரை வருத்துகின்ற, பாவை தன் வடிவம் தான் - பதுமைபோன்ற தமயந்தியின் உருவம்,

வடிவு அமை நூலில்-இன்னபடி உருவம் அமைய வேண்டுமென்று இலக்கணம் வகுக்கும் சாமுத்ரிகா

m211,N28KN

லக்ஷண நூலில், சொல்லும்-சொல்லப்பட்டிருக்கும், வனப்புஎலாம் - அழகு எல்லாம், அமைத்து-அமையும்படி, வேதன் - நான்முகன், கடி-வாசனை பொருந்திய, மலர் - தாமரை மலர்போன்ற, செம் கை வண்ணம் - தன் சிவந்த கைகளின் திறமையை, காட்டிய - காட்டிய, உருவுகொல்லோ - உருவமோ?

(அல்லது) அடு - போர்செய்கின்ற, கணை - மலர் அம்புகளையுடைய, வேனிலான் - மன்மதன், இன் - இனிய, அமுது - அமிர்தத்தில், கோல் தோய்த்து - எழுதுகோல் தோய்த்து, தீட்டும் - வரைந்துள, படிவமோ - உருவமோ (என்று நளன் மயங்குகின்றான்.)

மடலவிழ் கமலப் புத்தேள்
வடிவினை யமைத்து வெய்ய
தடமுலை யமைப்ப மாதி
னுறுப்பலாற் றரமின் றென்று
விடையினுக் கமைத்த கூற்றை
யெடுத்தெடுத் தமைத்த லாலோ
கொடியெனத் தேய்ந்து தேய்ந்து
குறைந்தது மருங்கு ருனே. 56.

(உரை). மடல் அவிழ் - இதழ் விரிந்த, கமலப்புத்தேள் - தாமரையில் இருக்கும் பிரம்மன், வடிவினை அமைத்து - தமயந்தியின் உருவத்தைச் செய்து, (பிறகு) வெய்ய - விருப்பத்தை விளைவிக்கின்ற, தடமுலை - பருத்த ஸ்தனங்களை, அமைப்ப - அமைப்பதற்கு, மாதின் - தமயந்தியினுடைய, உறுப்பு அல்லால் - உறுப்புகளாகச் சமைந்த பாகங்களை அல்லாமல், தரம் இன்று என்ன - வேறு தகுந்த பொருள் இல்லை என்று தேர்ந்து, இடையினுக்கு - இடுப்பை அமைப்பதற்கு, அமைத்த கூற்றை - உபயோகித்த பொருளின் ஒரு பகுதியை, எடுத்து - சிறிது சிறிதாக இடுப்பினின்று எடுத்து, அமைத்தலாலோ-அம்முலைகளைச் செய்தபடியாலோ, கொடியென - கொடியைப் போல், தேய்ந்து தேய்ந்து - தேய்ந்து தேய்ந்து, மருங்குல் - அவள் இடை, குறைந்தது - குறைந்துபோய் விட்டது.

சூ ளா ம ணி

[550-வது பக்கத்தொடர்ச்சி]

4. இரதநூபுரச் சருக்கம்

உலகத்திலுள்ள மதில்களில் எல்லாம் நீண்டதாகிய மதிலால் சூழப்பெற்ற போதனமென்னும் பெரிய நகரத்தின் அரசருடைய வரலாறு அவ்வாறு நிகழ்கின்றது. அது கிடக்க,நறுமணங்கமழும் நீண்டபொழில்களால் சிறந்த விஞ்சையருலக வரலாறு நாமுரைக்க வேண்டியிருக்கிறது.(மணமகனுலகு கண்டோம் மணமகளுலகை இனிக் காணலாம்.)

அவ்விஞ்சைய ருலகம் ஒரு குன்று. இவ்வுலகத்திலே ஒரு குன்றின்மீது நிலாவின் வெண்சுடர்பாய்ந்து பரவுமானால் எவ்வனம் ஒளிருமோ அவ்வனமே அவ்வெள்ளிமலையும் மிளிர்கின்றது. கீழே திரைகள் உலவும் நீண்ட கடலையும் தீண்டி நிற்கின்றது. கடலெழுந்த நிலவு அதிற் பாய்தலாலே அம்மலை வெளுத்ததென்று சொல்லலாம்படி கடலரு கெழுந்ததும் ஓர் அழகேயன்றே? அதனுயர்வை என் என்போம்.விளங்கும் ஒளியுடைய மணிகளாலாகிய வானுலகம் இம்மலையின் புறத்தே விலகி நிற்க, அதனையும் தாண்டி மேல் செல்கின்றது இம்மலை. இதனழகையும் இதன் உயர்வையும் கண்டு இமையவருலகமும் இதற்கு மேலோங்க இடம்விட்டு அகல நிற்கின்றது.

இவ்வாறு ஓங்கித் தோன்றும் உலகினருகே சென்று பார்ப்போம். என்ன காண்கின்றோம்? முதற்பாடலிலேயே விஞ்சையர் உலகைப் புகழத்தொடங்குவார் "விரைசெய் வார்பொழில்" என்று சிறப்பித்தாரன்றோ தோலாமொழித்தேவர். அப்பொழிலே காண்கின்றோம். என்ன அழகிய காட்சி! கருமுகில்களிடையே செக்கர்வானம் தோன்றுவதுபோல இப்பொழில்கள் செக்கச் சிவந்து ஒளிர்கின்றன. மாங்களின் இடைவெளியிலிருந்தெல்லாம் பேரொளி மிளிர்கின்றது. ஈதென்ன புதுமை! ஈதோ வானவர்கள் உள்ளே கூடியிருப்பது காண்மின். தம்மைப் பிரியாத குழலாரோடும் மனமொத்து அப் பொழிலிலிருந்து விளையாடுகிறார்கள். ஆம். இவ்வின்பத்திடையே எழுந்தொளிரும் திருமேனிப்பொலிவே இவ்வாறு செக்கச் சிவந்து நம் கண்ணைக் கவர்கின்றது.

இப்பொழில்கள் ஈதோ நெருங்கிவிட்டன. இவைதாம் கற்பகப்பொழில்களேயாம். ஈதென்ன ஒரு புதுமணம். மனமலர மகிழும் அன்புடையவராய் வானரமங்கையருடைய பவழவா யமுதத்தைப் பருகுகின்றனர் அவ்வானவர்கள். இன்பக்களிப்பே தவழ்ந்துலாவும் அம்மங்கையரின் மெல்லிய கொங்கையைப் புல்லிக்கொள்கின்றனர். அவர்கள் அணிந்திருந்த தார்கள் நெருக்குண்டு அழிகின்றன. அவற்றினின்றும் பிழிந்தெடுத்தாற்போல நறுமணம் எங்கும் வெள்ளமாகப் பொங்கிப் பரவுகின்றது. ஈதே இம்மணம்.

என்ன கடவுட்டன்மை இந்நாற்றத்திற்கு? மெல்ல வீசும் குளிர் காற்றினிடையே உலவி வருவதால் என்ன குளிர்த்தி. என்ன நறுமணம் மூக்கைத் தாக்கிச் செறிந்து வரும்இம்மணம் எங்கிருந்து வருகின்றது. வருகின்றதோ நறுமணங் கமழும் இந்தச் சந்தனப் பொழிலில் இருந்துதான்.ஆனால் சந்தனத்தின் மணமல்லவே ஈது. அல்ல. ஈதோ உள்ளே பார்மின்;இணைந்து வாழும் கின்னர வானவர்கள் மிளிரும் தம்மொளி சுற்றும்ஒளிரத் தா மணைதொறும் ஓங்கிவளரும் கொங்கைகளில் அவ்வியல்புக் கோர் பூணும் கொண்டு விளங்கும் கின்னரமங்கையரோடுநிலைபெற்றிருக்கும் சிறப்பினைக் காண்மின். இவர்க ளின்பத்தே எழுந்த நறுமணமே இம்மணமாகும்.

இம்மணத்தைப் பரப்புங் காற்றுஇருந்தபடி என்னே. பொழுதோ இரவு. வாடைவீசுகிறது. அவ்வாடை இங்குத்தான் பெருவிருந்துபெற்றுக் கூத்தாடுவது போலத் தோன்றுகின்றது. நிறைந்த நீர்நிலைகளின் மீது தவழ்ந்துவருகிறது. அவ்வாடையால் அந்நீர்

எழும்திரைஒழுங்குகள் நிலத்தே உழுதசால்கள்போலத் தோன்றுகின்றன.அவ்வாறு நீரை உழுதுவருதலின் குளிர்ந்துவீசுகிறது.காற்றில் பொங்கிஎழும் பூப்பொடிகளோடு தேனையும் கொப்பளித்து வருகின்றது அவ்வாடை. ஆதலின் மணத்தோடும் வருகின்ற தன்றே. அரமங்கையர்களின் கொங்கைகளையே செண்டுவெளியாகக் கொண்டு நடத்தலின் குதித்துக்குதித்துச்செல்லவேண்டியிருக்கின்றது. ஆதலின் மெல்லென வீசுகின்றது.அங்குக் கலவைப்பூச்சும் பெறுகின்றது அவ்வாடை. ஆர்வன (உண்பன) மீது உழுது தேனையும் கொப்பளித்து, அங்கராகமும் பெற்று வாரிகள் மேல் குதிகொள்ளும் பெருவிருந்தின் திற மிருந்தபடி ஈது.

ஈதென்ன வியப்பு! இவர்களோ இன்பத்தின் மகிழும் வானவர்கள்.தம்மூர்விட்டு இங்கு நிலையாகக்குடி புகுந்தது எதனாலோ! பட்டும் தூவியும் பொன்னும் மணியும் ஒன்றாயியைந்த கட்டிலில் வாழ்வோர் இங்குக் கானகத்தே பறிப்பார் இன்றித் தழைத்துச்செழிக்கும் சந்தனத்தழைகளையே கீழே பரப்பி நறுமணங் கமழும் படுக்கையாகக் கொள்கின்றனர். அத்தழைகளினுள்ளே தேனும் இருந்ததால் படுக்குந்தோறும் அத்தேன் உடம்பை நனைக்கின்றது.இவ்வாறிருந்தும் இதனையே விரும்புகின்றனர். இவர்கள் விரும்பும் இன்பம்தான்யாது.ஊனகத்தவராம் மக்களைப்போல் இன்பம் துய்க்கவன்றோ இவர்கள் இங்குவந்துளது. இஃது எதனால்? ஈதன்றோ இவ் விஞ்சையுலகின் பெருமை. (ஊனவா என்று தேவாரம் மக்களைக் கூறும். ஆதலின் ஊனகத்தவரும் அவரேயாம்) கண்ணால் கண்டு இன்புறுவதன்றி மெய்யுறுபுணர்ச்சியால் இன்புறுகின்றனர் என்றபடி.

இவர்கள் அன்பு குழையத் தழுவி நிற்கின்றனர். இங்கே எங்குப் பார்த்தாலும் அதனையே காண்கின்றோம். ஈதொரு மலை முழை காண்மின். பளிக்கறையாம்இதனுள்ஐந்து நிறங்களும்தோன்றப் புனைந்திருக்கின்றனர். இதனுள் பாறைகளும் தூங்குவ போன்று கிடக்கின்றன. ஒலியன்றி ஒடுங்கும் நிலையைக் காண்மின். கருமுகில்கள் தவழும்இம்மலையில், அம்முகில்களையே திரைகளாகக்கொண்டு. இப்பளிக்கறையின் உள்ளே, கூந்தல் அழகிய பெண்கள் தமக்கு வலியாயமைந்த ஆடவரோடு கூடிக் குலாவி குழைந்தாடுகையில் அவர்கள் கூந்தலும் நெருக்குண்டு அவிழ்தலின் அங்கிருந்த பூக்களின் பொடிகள் ஈதோ இக்கற்களின் மேற் செறிந்து கிடக்கின்றன.

ஈதென்ன இந்தப் பளிங்குப்பாறையைப் பார்த்தபடி நிற்கின்றான் இவ்வானவன்? வானரமங்கை ஒருத்தி இவ்விஞ்சையருலக மங்கையரின் நடையழகைக்கண்டு வியக்கின்றாள். அதி லீடுபட்டு அதைக் கற்க வேண்டி மேலிருந்து இழிந்து வருகின்றாள். முறையே காலூன்றி நடக்கின்றாள். செந்தாமரையென்னத் திகழும் அவளுடைய திருவடியை மெல்லிய மலரெனக் கொண்டு வண்டுகள் உண்ணவந்து மொய்க்கின்றன. அவ்வானரமங்கையின் மணாளன் அவளைக் காணாது தேடிப் பின்னே வருகின்றான். அவளுடைய திருவடிச்செம்மை பதிந்துள்ள பளிக்குப்பாறையைக் கண்டு மனங்குழைகின்றான். அப்படி அவனுடைய கண்களைக் கவர்கின்றது அப்பாறை.

பொற்பாறைகள் பொலிகின்றன. அவற்றின்மேல் அருவிகள் திரண்டுவிழுகின்றன. தொங்கும் கையையுடைய யானைகள் தும்பிக்கையால் நீர் கொண்டு குளித்து மகிழ்கின்றன. இம் மதங்கொண்ட யானைகள் குளித்தும் மதநாற்றம் நாறவில்லை அந்நீர். ஈதென்ன வியப்பு? எதிரே நாககன்னியர் குளிக்கின்றனர். அவர்களுடலம் நறுமணங்கமழ்தலின், அந்நீரும் மதநாற்றம் ஒழிந்து நாககன்னியரேபோல முல்லைமணம்வீசி நிற்கின்றது.

எங்கும் பூப்பொழில்; எங்கும் பூமணம்; வாடையும் பூவாடை; காதன் மணமும் மலரென அவிழும்; மகளி ரடியும் பூ. சேக்கையும் பூந்தழை; எங்கும் பூப்பொடி, எல்லோர்மீதும் பூந்தார். திருவடியும் பூவே திருமேனி மணமும்பூவே. ஆண்மையில்மிக்க நீண்ட கழலணிந்த விஞ்சையரது நாட்டை மேலும் மேலும் பன்னிப் பன்னி முயன்று உரைப்பதென்ன? பூக்கள் எல்லாம் பொற்றாமரைகள். பெரும் பூப்பொழில்கள் எல்லாம் நீரும், இசையும், அணியும், தாரும், விளக்கும், வீடும், ஒளியும் உணவும் கலமும் உடையு மெனப் பத்தும் பழுத்த கற்பகப் பொழில்களாம். பின் என்ன கூறுவது.

அ ப் ப ர்

அப்பரும் அறுபத்து நான்கு கலைகளும்.—31. இதிகாசம்

[591-வது பக்கத் தொடர்ச்சி]

பாண்டவ கௌரவர் சரிதை

1. சூரபன்மனும் இராவணனும் புண்ணிய புருடர் இரேதா யுகத்திலே மாயையின் மைந்தர்களான சூரபதுமனதியாரைக் கண்டோம். அவரை யொழிக்கச் சிவபெருமான்*பெருஞ் சக்தியான முருகவேல் அவசியமாயிருந்தது. அது வாராவிடின் வெற்றி சூரனதாகும். மும்மலங்களின் பெரிதாய்ப் பிரமனதியரையும் மயக்கித் தன்வச மடக்கிய மாயையை அழிக்கும் வகையைக் கந்தன்சரிதையாகிய இதிகாசம் விளக்கியது. பின்னர்,ஆணவத்தின் உருவமாகிய இராவணன் முதலாயினோரைக் களைய மாயையின் சம்பந்தமான சிவசக்தியான திருமால் மானுட அவதாரமெடுக்க நேர்ந்தது. சூரபத்மனுக்காகிலும், இராவணனுக்காகிலும் தங்களை அழிக்கவருஞ் சக்தி சிவசக்தியே என்னும் உணர்ச்சி யெழவில்லை. எழுந்திருப்பின் அவர் மனம்அவர்களைவேறுவிதமாய் நிகழச்செய்திருக்கும்.

சூரபன்மனும், இராவண கும்பகர்ணாதியரும் பாபாத்துமாக்களென எண்ணுதல் தவறாகும். முருகக் கடவுளையே பிரத்தியக்ஷமாய்க் காணப் புண்ணியம்

பெற்ற சூரனும் அவன் தம்பிமாரும் புண்ணிய வடிவினரேயன்றி வேறிலர். பெருந்தவசிகளும் காணுதற்கரிய ஞானவொளி வடிவத்தைக் கண்ணாரக் கண்டவுடனே அவர்கள் பிறவிக்கடலைநீந்தினர். அவ்வாறே இராமபிரானைத் தரிசித்து அவரெதிரில் நின்று போர்தொடுத்த இராவண கும்பகர்ணாதியரும் புண்ணிய புருடரே யாம்.

நன்மையுஞ் செல்வமும் நாளு நல்குமே
தின்மையும் பாவமும் சிதைந்து தேயுமே
சென்மமு மரணமு மின்றித் தீருமே
இம்மையே ராமவென் றிரண்டெ ழுத்தினால்

என்று கம்பராமாயண நூற்பயன் விளக்குமாயின், இராமனுடன் விடாது சிலநாள் போர்செய்து அவனையே சிந்தித்த இலங்கைவாசிகள் எத்தன்மையராயினும் பிறப்பறுத்தோரென்பது திண்ணம்.

எழுதப்பட்ட இதிகாசங்கள் இவ்விஷயத்தை எடுத்துக்கூறினும், இளைஞர் அறியும்வண்ணம் வற்புறுத்திக் காட்டவில்லை. சூரபன்மன் பேரிலும், இராவணன்பேரிலும் ஒருவகையான துவேஷம் நமக்கு உண்டாகுமாறு காதைகள்மொழியப்பட்டன. ஆரியநடையிலும் அவ்வாறிருந்ததெனின், தமிழில் கம்பன்முதலியகவிகளால்அவ்வரக்கர்களின்தோஷங்கள்பன்மடங்காய்ப் பெருக்கிக் காட்டப்பட்டன வென்பதற்கு வேறுஅத்தாக்ஷிவேண்டுவதில்லை. இராவணாதியரைக் குறித்துப் பேசுங்காலையில் கம்பர், அவர்களுக்குக்கொடுக்கும் அடைமொழிகள் சோழன் பகைவர்களுக்கு அந்நாளில் கொடுக்கப்பட்டவைகளோ என்று எண்ணவேண்டியதா யிருக்கின்றது*. கச்சியப்ப சிவாசாரியர் கம்பர்போல் சூரபத்மனாதியரை அத்துணை வைதிருக்கக் காண்கிலம்.

ஆகையால் ஆராய்ந்து நோக்கும்போது இவ்விரு இதிகாசத்து அரக்கத்தலைவர்கள் ஆண்மை, வன்மை, கல்வி, கலை இவற்றில் சிறந்தவராயும் வேண்டுமென்னும் காலத்தில் பஞ்சேந்திரியங்களைச் செவ்வனேயடக்கித் தவஞ்செய்யக்கூட மனோதிடம் வாய்ந்தவர்கள் ஆகவும் காணப்படுகின்றனர். ஐம்புலன்களைப் பலகால மடக்கித் தவஞ்செய்து தேகத்தை ஒரு பொருளாக மதியாது மனதை ஒருநிலையில் வைக்கக்கூடியவர்கள் அந்நிலையிலிருந்து இரண்டொரு படிகள் மேலே செல்வராயின் நிரந்தரமான பேரானந்த முத்தர்களாவது சுலபமாகவே முடிந்திருக்கும். அவ்வழியைக்கைப்பற்றுதுமாயாசம்பந்தத்தில்இறங்கிஆயிரத்தெட்டண்டங்களை நூற்றெட்டுச் சதுர்யுகம் ஆட்சி செய்வதினும் பெரும்பேறு வேறில்லை என நினைந்து தன் தாயின் தத்துவமான மாயை வடிவில் இறங்கியவன் சூரபத்மன். இவன் மும்மூர்த்திகளுக்குச் சமானமாய் வியக்கத்தக்க பதவியில் நின்றானெனினும் மாயா சம்பந்தமானதால் ஒருநாள் அழியத்தக்கவனமுடைய இவன் அறிவு மழுங்குவதாயிற்று. ஆயினும் கருணைவெள்ளமே யோர் வடிவான சரவணப் பெருமானைத் தரிசித்த அந்தக் கணத்திலேயே மாயையின் கேட்டினின்று நீங்கியவனாயினான். அதனாலேயே முருகக்கடவுளுடன் சமாதானஞ் செய்துகொள்ள அவனுக்கு மனம் எழவில்லை. அவ்வாறு செய்திருப்பானாயின் மற்றும் பிறவியில் சுழலநேரும். ஆதலால் அவர் சந்நிதானத்தில் நின்று போர்சாதித்தலே கருமமெனத் துணிந்தனன். அவ்வாறு துணிந்ததன் பயனாலே அவன், சேவலும் மயிலுமாய், ஆறுமுகக் கடவுளின் அற்புதச் சேவையாய் முடிந்தனன்.

இராமாயணத்தையுற்று நோக்கின் இராவணன் மனமும் சூரன் மனம்போல் ஒருநிலையில்நின்றது. சீதையைத் திருப்பிக்கொடுத்துச் சமாதானம் இராவணன் இராமனுடன் செய்திருக்கலாம். அவ்வாறு செய்ய எல்லாவசதிகளும் சந்தர்ப்பங்களும் இருந்தன. இராவணனும் ஏனைய வரசர்களுடன் சமாதானத்திற்கு ஒவ்வாதவனல்லன் - வாலி, கார்த்தவீரியார்ச்சுனன் முதலானோரிடம் சமாதானஞ் செய்தவனே.

வாலியை ஒரே அம்பினாற் கொன்று, கார்த்தவீரியார்ச்சுனனைக் கொன்ற பரசுராமனை வீரம் அடங்கச் செய்த இரகுநாதனுடன் சமாதானஞ் செய்ய இராவணன் வெட்கப்பட்டவனல்லன். ஆயினும் அவன் மனம் செல்லவொட்டாது தடுத்தது சீதையின் வடிவாகும். அவ்வடிவு இவன் செய்த பெருந்தவத்திற்கெல்லாம் பெரிதாகக் காணப்பட்டது. முத்தியாகிய பேரின்பவொளியைச் சீதையிடம் கண்டு அதில் லயப்பட்டதால் சீதையை விட்டுவிட அவனுக்கு மனம் வரவில்லை. ஆயினும் அவனைச் சுற்றமுள்ளோர் சிற்றின்பவிருப்பத்தால் சீதையை விரும்பினனென்று எண்ணியும்பழித்தும் நின்றனரேயன்றி, சோகமற்றவனத்திடை அவன் கொண்டுவந்து வைத்திருந்த பொருள் சோகமற்ற வொளிவடிவெனச் சித்தத்தில் பொருத்தினனேயன்றி, ஆணவமல சம்பந்தத்தினால் அறிவு மழுங்கப்பட்டு ஞான சம்பந்தமாய் உணர்ந்திலன். எனினும் இத்தகைய பொருளை விட்டுவதினும், உயிர் துறப்பதே மேன்மை யென்னும் வைராக்கியம் பெற்றான். இவ்வைராக்கியம் சீதாதேவியின் தத்துவத்தினின்று பிறந்த அருளின் பயனாகும். ஆகவே தேவிக்கும் தேவனுக்கு மிடையே நிற்கும் ஆணவமல வடிவான அவன் தேகத்தை இராமனுடன் போர்செய்து தொலைக்கலானான்.

சூரபன்பனும் இராவணனும் முறையே மாயை ஆணவம் என்னும் இருமலங்களை உருவாய்ப்பெற்றபேரறிவினர். அறிவு ஒருபுற மிழுக்கத் தேகசுபாவம் மற்றொருபுறமிழுக்கப் பேரறிவு மேலெழ அன்னோர்மலம் உள்ளடங்கப் பெரும்பதவியில் நிலைத்தனர். ஆயினும் அவர் நிலை மலபரிபாக நிலையாம். ஆதலால் சத்திநிபாதம் அடையக்கூடியவராயினர். அவர் ஆட்சியில் நிகழ்ந்த பொருளெவ்வாறாயினும், இவர் சென்றவழியெவ்வாறாயினும் இவர் புண்ணியம் முத்திநெறிக்கேதள்ளியது. விபீடணன் மனத்தைக் கரைத்து இராவணனைவிட்டு நீங்கச்செய்தது இராவணன் செய்த புண்ணியமே யாகும். இன்றேல் விபீடணன் இலங்கையைவிட்டு வேறிடம் சென்றிருக்கலாம். விபீடணன் இலங்கையைப் பெற்றானெனினும், இராவணன் அதனினும் பல்லாயிர மடங்கு பெரும்பேறு பெற்றனன் அன்றோ?

* கருடன் வந்தபோது இந்திரசித்துவிட்ட நாகபாசம் அற்றுப்போனதை விளக்கும் செய்யுளில் கம்பர் "பதகன் துறந்த வுரகம்" என்றார். 'பதகன்' என்பது கூறாமல் "வல்லோன்" முதலிய வேறு மொழிகள் கூறியிருப்பின் நன்றன்றோ? அத்துணை கரேமொழிகளே கம்பர் அரக்கத்தலைவர்களுக்கு விடுவது காண்க.

மலர் வனம்

புன்னைத் தங்கை.

இயற்கையை உயிருறத் தழிவியவோர் இனியஉணர்வினர் இவ்விந்தியர் எனச் சிறப்புறக் கூறுவார் நம் கவிவரர் இரவீந்திரநாதர். இயற்கையோடிகல்கொள்ளார், வெல்லச்செல்லார்; மற்று, விழைந்ததனைத் தழுவிக்கொள்வார்; மேன்மைசான்ற இந்தியப் பெருமக்கள்தம் ஒவ்வொரு உணர்வும் ஒவ்வொரு மொழியும் ஒவ்வொரு செயலும் இதனையே காட்டும். இவ்வுண்மையை இந்நுண்மையைக் காணுங் கண்களாய்க் காட்டுகின்ற நற்காட்சியுமாய் அமைந்திருப்பன பண்டைய நம் காவியங்கள். இந்த நற்பெருஞ் செல்வம் நம் பரம்பரைச் செல்வம்; பகிர்ந்திதனைப் பருகப்பருகப் பெருகத்தக்கது. எம்மோடதனை யுவந்துடனிருந்துண்ண, நண்பர்காள், சற்றே வம்மின்.

வனப்புடை வனிதையைத் தனியிடங் கண்டான் ஒரு செம்மல். இருவருக்கும் இடையே காதல்பிறந்தது. மானுட் இனத்ததோ இவ்வுருவென இருவரும் ஒருவரையொருவர் மாறிமாறி மயங்கினர்; பின் ஆம் எனத் தெளிந்தனர்; கண்களவு ஆடினர்; மருங்குற நெருங்கினன் மைந்தன், நங்கையும் நல்கித் தண்ணளி செய்தனள்.

அன்னவளைப் பின்னர் ஆயத்துளுய்த்து அரிதிற்பிரிந்த இக்காதலன் மையல்மிகுந்து வாடிய தோற்றத்தைக் கண்ணுற்ற அவன் பாங்கன் உற்றது வினவியறிந்து அவனைக் கழறினனேனும், இம் மையலூட்டிய அம்மாதராளை நோக்கிய பின்னர், அந் நல்லாளை காடிய தலைமகன்றன் உணர்வின் தேர்ச்சியைப் பெருமையுறவியந்து பின்னு மவளை அடைவதற்குரியதோர் உபாயம் உரைப்பவனு மாயினான்.

இதன்படி தலைமகன் தனதுயிர்த் தலைவியின் தோழியினை நாடியடைந்து, தன் அன்பின் மிகுதியையும் ஆற்றாமையையுஞ் சாற்றி, அத் தலைமகளைத் தன்கை சேர்க்குமாறு இரந்திரந்து பின்சென்று வேண்டுவானதலும், அம்மடவாள் இவன்பால் அருள் வைத்து அன்னது செய்துதவ உடன்பட்டாள். உடன்பட்டபின் இதற்கோர் உபாயஞ் சூழ்த லரியதன்று. தினைப்புனத்தின்காவல் தன்கடமை யாகும்வரை தலைமகட்கிவனைத் தனியிடஞ் சேர்தலும் எளியதாகின்றது. கிளிக ளிறங்கிக் கதிர்களைக் கொய்துகொய்து வயிறுற உண்டு மகிழ்வதும் அந்நாட்களே.

இனி நாடோறு மத்தோழி தலைப்படுமிடத்திற்கு அம்மெல்லியல் மடவரலைக் கொணர்ந்து அவள்தன் உயிரினுமினிய காதலன்பால் விடுத்துத் தான் மெல்ல மெல்ல வொதுங்கி அகல்வாளாகின்றாள். அன்புறத்தழுவி யின்புற அளவளாவுகின்றனர் இக்காதலர். ஆயினும் இவர் அன்றன்று துன்புறப் பிரிதலும் வேண்டும். வரைவு முற்றுமேல் பின்இப்புன்மையுறு பிரிவு அற்றுவிடுமன்றோ! ஆதலின், பலரறிய மணம் செய்து அவன் வாழ்மனை வைகும் பிரிவிலாப் பெருவாழ்க்கை நயந்து, தலைமகளும் அவள்பொருட்டுத் தோழியும் நைகின்றனர். வரைதலெனின் தலைமகன் பொருளீட்டி வருதல் வேண்டும். அதுபற்றி நெடிதுநாள்தொடர்ந்து பிரிந்திருத்தலும் இன்றியமையாததாகின்றது. ஆதலின் வரைவின்கண் விரைதற்கு அஞ்சுகின்றானவன். இடையிட்டுப் பலகாலம் பிரிவதனினும் அன்றன்று சிறிதுபோது பிரிதலே பொறுத்தற்குரியதென மதிப்பானாகி, வரைவென்னுஞ்சொல் வாய்வருத லின்றியே களவொழுக்கத்தினைக் கடைபிடித்து நிற்கின்றான். இறுதியில் இவன் என்செய்வானோவெனத்தோழியின் நெஞ்சம் அஞ்சுகின்றது. தலைமகளோ தன் காதலனது இயல்பின் மாண்பினை அயிர்த்திலளாயினும், ஏற்றுக்கோ இவ்வண்ணமிவன் வரைவு நீட்டிக்கின்றான் என்று எண்ணி எண்ணி ஏங்குகின்றாள். எனினும் தானேனும் தன்தோழியைக் கொண்டேனும், "ஐய என்னை மணங்கொண்டு நின் நன்மனைவி யாக்கிக்கொள்" என்று எதிருற நின்று வெளிப்படையாய்க் கேட்பதுவோ வொருபோதும் ஆகாது. தம்மை வற்புத்தி அவன்கைச் சுமத்துவது போல் எளிமையுடைத்து இது என்னும்மானத்தால் கூசினர் இம்மாதரார். இதற்கிடையில் தன் களவு தனக்கு வாய்க்கின்றதென் றிருந்திட்டான் தலைமகன்.

இன்னவாறு நிகழும்நாள் ஒருநாள் வழக்கப்படி தலைமகன் தலைப்படுமிடம் வந்து சேர்கின்றான். வரைதல் பற்றித் தம் உள்ளக்கருத்தை ஐயமற அவனுக்கு இன்று தெரிவித்தே தீர்வது என்னத் தலைமகளுந் தோழியுஞ் சிந்தித்துக்கொண்டிருக்கின்றனர். ஆயினும் அவனைக் கண்டபின்னர் இவர்களுக்கு மனங் குழம்புகின்றதேயன்றி வாயோ எழவில்லை. தலைமகன் அவளைத் தழுவி யழைத்துக்கொண்டு ஒரு புன்னைத் தருவின் நீழலில் எய்துகின்றான். அங்குற்ற தலைமகள் தன்னை யவனுக்கு நல்குதலின்றி, புல்லிய அவன் கரங்களை மெல்லமெல்ல நெகிழ்த்துகின்றனள். காரணம் யாதென வினவுந் தன் அன்பனுக்கு விடைகூறாமலே தலைகுனிந்து நிற்கின்றாளிவள். மிகுகின்ற வேட்கையனாகிய அவ்விடலை, தன்காதலியின் குழல்திருத்திக் கன்னத்தினைத் தைவந்து முகத்தினைப் பையப்பைய நிமிர்த்தி அவள் கண்களின் எழிலினை இனிது நோக்குகின்றான். நோக்கி, "நல்லாய், என் ஆருயிர்க்காதலி; என்னுற்றதுகொல் இற்றைப்பொழுது? அண்மிய என்னோடிகலிநீ பின்னடி பெயர்த்தற்குக் காரணம் அறியகில்லா யான் கலங்கக்காணல் நினக்கு அழகிதோ! என் செல்வியே, நின் சிந்தனை யாதெனத் தெரிவுறச் செப்புவாய்" என நனி இரந்தனன். தன்னை வரைந்துகொள்ளாமல் அவன் இங்ஙனம் இறுதி யின்றி இயற்றிவருதல் நீதியன்றென ஏதோ சாற்றி அவனுறுதியைக் கேட்டுக்கொள்ளப் போகின்றாள் இப்பேதை என்னவே, நண்பர்காள், எண்ணினீர்களாயின், அத்துணையும் பிழை. கமலமன்ன அம்முகத்தினாள் மனத்தினில் இக்காலம் விளைந்த கலக்கத்தின் காரணம் வேறு, கண்டீர். காதலனைக் கனிந்துநோக்கி மெல்லென மெல்லெனக் கழறுகின்றாள் அக்காரிகை.

விளையா டாயமொடு வெண்மண லழுத்தி
மறந்தனந் துறந்த காழ்முளை யகைய
நெய்பெய் தீம்பால் பெய்தினிது வளர்ப்ப
நும்மினுஞ் சிறந்தது நுவ்வை யாகுமென்
றன்னை கூறினள் புன்னையது சிறப்பே
யம்ம நாணுது நும்மொடு நகையே
விருந்திற் பாணர் விளரிசை கடுப்ப
வலம்புரி வான்கோடு நரலு மிலங்குநீர்த்
துறைகெழு கொண்கநீ நல்கி
னிறைபடு நீழல் பிறவுமா ருளவே.

[புதியராய் வந்த பாணர்கள் பாடுகின்ற இசைப்பாட்டைப் போல் வெளிய வலம்புரிச்சங்கு ஒலிக்கின்ற விளங்கிய நீரையுடைய துறையோடு கூடிய நெய்தல்நிலத் தலைவனே, முன்எங்கள் குழந்தைப்பருவத்தில் யாம்எம்மோடு விளையாடுகின்ற தோழியரோடு சென்று வெள்ளிய மணலில் புதைத்துப் பின் மறந்துவிட்டுவந்த ஒரு புன்னையின் விதையானது வேரூன்றி முளைத்து முளை தோன்றியதால், மீண்டும் அதனை நோக்கி மகிழ்ந்து நெய் கலந்த இனிய பாலை நீராக வார்த்து இனிமையோடு வளர்க்கும் நாளில் எமது அன்னை எம்மை நோக்கி, "நீங்கள் வளர்த்துவரும் இப்புன்னையானது நும்மினுஞ் சிறந்ததன்றோ, அது நும்முடன் பிறந்த தங்கை ஆகுந் தகுதியுடையது கண்டீர்" என்று இதன் சிறப்பினை விளங்க உரைத்தாள். ஆதலின் எமது தங்கையாகிய இப்புன்னையின் எதிரில் நும்மொடு நகைத்து விளையாடி மகிழ்வதற்கு யான் மிக்க வெட்கம் அடைகின்றேன். நுமக்கு விருப்பமுண்டாயின், நிறைந்த மரத்தின் நிழல் பிறவும் இங்குள, அவ்வயிற் செல்வோம்]

மழமழவென இதனை மொழிந்தனள் இம்மங்கை. வரைவிற்குரியன உரைக்கநினைத்த அவள் நாவினில் தருவினது தன் தங்கையாம் உறவே விரைந்து வந்தது. அதுவுமன்றி, காதலனொடு கூடியிருக்க நாணிய தன் உணர்வினையும் வெளிப்படுத்தினள் என்னின் அன்னதோர் வாழ்க்கையின் மேன்மையை விளம்பவும் வேண்டுமோ! நல்லவென் நண்பர்காள், பண்டைத் தமிழின் பான்மை இன்னது.

அதுவும் இல்லை

(சிறு கதை)

அவந்திதேசத் தரசன் மிகவும் மனக்கவலை உடையவனாகஇருந்தான். மனைவியர் மந்திரிமார் மக்கள் யாவரும் அதனை ஆற்ற முயன்றதொன்றும் பயன்படவில்லை. எப்பொழுதும் ஏதோ வொரு துன்பமே அவனுள்ளத்தில் குடிகொண்டிருந்தது.

"எல்லாச் செல்வமுடன் எல்லா ஆட்சியும் உடையவனாக இருக்கின்றேன். இவ்வரசு எனது உரிமை, இதன்கண் உள்ள இப்பொருள்களெல்லாம் எனது உடைமை, இங்குள்ள மக்களெல்லாம் என்னடிமை; ஆயினும் என் மனம் அமைதியற்று எப்பொழுதும் அல்லல்பட்டவண்ணமாகவேயோ இருத்தல் வேண்டும்" என்றுஎண்ணுந்தோறும் அவன்மனம் பின்னும் அலைப்புண்டது. இவன் கல்லாதன இல்லை, கேட்காதன இல்லை, துயரந் தீரும்படி இவன் முயலாதனவுமில்லை. எனினும் இவன் மனக்கவலையை மாற்ற லரிதாகியேயிருந்தது.

இவ்வாறு இருக்கும்போது ஒருநாள் முனிவரர் ஒருவர் இவன் சபையின்கண் வந்து தோன்றினர். அவரை இவ்வரசன்எதிர்கொண்டழைத்து முகமன் கூறி ஆதனமளித்து அடிபணிந்து மண்ணுறவணங்குதலும், "மன்னவா உனக்கு எல்லாமங்களமும் உண்டாகுக" என்று அம்முனிவர் வாழ்த்தினர். அப்பொழுது அரசன், "முனிவா, எல்லாமங்களமும் உண்டாகுக என்று வாழ்த்துவது மிகஎளிது; ஆகையால், எல்லாரும் இப்படி வாழ்த்திவிடுகின்றனர். மற்று, இருக்கின்ற என் மனக்கவலை போவதற்கு ஒரு உபாயம் கூறினவனை இதுகாறும் நான் கண்டதில்லை. எனக்கு உண்டாகி இருக்கின்ற மங்களம் எல்லாம் போதும். இனி, அதனை அநுபவிக்கவொட்டாமல் என் மனத்துள் குடிபுகுந்திருக்கின்ற கவலையை மாற்றுவதற்கு ஒரு உபாயம் சொல்" என்று கழறினன்.

இதனைக்கேட்டுச் சிந்தனையுள் ஆழ்ந்த முனிவரர் முகத்தில் இளநகை யொன்று மெல்லத் தவழ்ந்தது. அரசனை நிமிர்ந்து நோக்கினர். நோக்கி, "மன்னவா, நீ வைத வசை எங்களுக்கு ஏற்றதுதான். உன் மனத்திலுள்ள கவலை தீரவேண்டுமாயின் ஒன்று சொல்லுகின்றேன் கேள். உலகம் முழுவதும் நாடி, சிறிதேனும் கவலையில்லாமல் முற்றிலும் இன்பமும் அமைதியும் உடையயாரேனும்ஒருவனை அடைந்து, அவன் படுத்துறங்குந் தலையணையை வாங்கிக்கொண்டு வந்து அதனில் நீ துயில்வாயானல் நீயும் பின் துன்பந் தீர்ந்தவனாகி அமைதி பெறுவாய்" என்று அம்முனிவர் சாற்றினர். தன் துயரம் நீரும்வகை இத்துணை எளியதா என்று எண்ணி மகிழ்ந்த அவ்வரசன், கவலையற்ற யொருவனைக் கண்டறியும்பொருட்டு அப்பொழுதே தன் பரிவாரங்களுடன் உற்சாகமுடன் புறப்பட்டான்.

புறப்பட்ட இவ்வரசன் போகாத இடமில்லை; நாடாத மனிதரில்லை. மனக்கவலை இல்லாதான் ஒருவன் இருக்குமிடம் எங்குங் காண்கிலன். தன்னைப் போன்ற அரசர்களைச் சேர்ந்து கேட்டபோது அவர்களும் அவனைப் போன்றே அலைப்புண்ட நெஞ்சினர்களா யிருக்கக் கண்டான். அறிவிற் சிறந்த பெரியோரை அடைந்து வினவினன். அவர்நிலையும் அன்னவாறே. கற்றோரைக்கேட்டான், கல்வியேயில்லாத பாமரரைக் கேட்டான்; இருவர் மனத்திலும் விதனமே இருந்தது. தருமமுடைய தூயோரைக் கேட்டான், பழிக்கஞ்சாப் பாதகர்களைக் கேட்டான், துயரமே இருவரும் உடையவர்களாயிருந்தனர். இப்படியோ இவ்வுலகம் என்றுஅதிசயித்தான் அரசன். இதனைக் காட்டவோ முனிவ ரிவனைப் புறம்போக்கினர்?

தான் தேடிச்செல்கின்ற அவ்வொருவன் தென்படுதல் அருமை என்னும் உண்மை வளரவளர அரசனது உள்ளந் தளர்ந்தது. ஆயினும், போதிய வரையில் தேடினல், கவலையற்றவன் ஒருவனேனும் காணக்கிடைக்காமற் போவானே என்னும் எண்ணத்தால் தாங்கப்பெற்றவனாகி இன்னமும் இவ்வரசன்நடந்த தேயங்கள் பல; காலமும் அதிகம் கழிந்தது. ஆகாத தொன்றைக் கூறி முனிவன் தன்னை வஞ்சித்துவிட்டான் என்றஎண்ணம் அரசனதுமனதில் தோன்றத் தலைப்பட்டது.

இந்நிலையில் இவ்வரசன் ஒருநாள் கங்கைக் கரைவழியே சென்றுகொண்டிருந்தபோது, அமைதி தங்கிய முகத்துடன் ஒருவன் தன்னெதிர் வரக்கண்டனன். அன்னவன் கண்ணொளியும் முகமலர்ச்சியும் கைகளின் அசைவும் நடையின் தன்மையும் யாவும் துன்பச்சுமை யாதும் சுமக்காத அவனது உள்ளத்தைத் தெரிவித்தன. "என்னை வாழ்விக்க வல்லவன் இதோ வருகின்றான்" என மகிழ்ச்சிகூர்ந்த மன்னவன் அவனை எதிர்கொண்டுசென்று, "அப்பா, உன்னைப் பார்த்தால் யாதும் கவலையில்லாதவன் போல் தோன்றுகின்றது. அப்படியாயின் சொல்" என்றனன். அவனும் "அப்படியே" என்றான். மன்னவன் மனம் பூரித்தது; தன்னை வழிப்படுத்திய முனிவனை வாழ்த்தினன். "அப்பா, நன்றாக யோசித்துச்சொல், எவ்விதத் துன்பம், வருத்தம், கவலை, அல்லல், விதனம், வியாகுலம், ஒன்றும் இல்லாதவனா நீ, உண்மையைச் சொல். இது உண்மையாயின் நான் உய்ந்தேன்" என ஊக்கமுடன் நம் மரசன் மீண்டும் வினவினன். அவனோ அமைதி கலையாத முகத்தினனாய், "உண்மையே, அவைகள் ஒன்றும் என்னிடத்தில் இல்லை" என்று இயம்பினன். "ஆயின், ஆயின், நீ படுத்துறங்கும் தலையணையை எனக்குக் கொடு" என்று ஆர்வமுடன் வேண்டினன் அரசன். "அதுவும் இல்லை" என்று கூறித் தன்வழிச் சென்றான் இவன்.

முனிவனது கருத்து இப்பொழுது அரசனுக்கு முற்றும் விளங்கியது.

கலா நிலையம்

முன்னைய வால்யூம்கள்

இன்னும் சிலவே இருக்கின்றன

உடனே பெற்றுக்கொள்வது நலம்.

1928, 1930, 1931, 1932, 1933

வருடத்தியவை கிடைக்கும்.

பைண்ட் செய்யாதவை—ஒவ்வொரு வால்யூமின் விலை ரூ.	7	8	0
ஆப்லெதர் கில்ட் பைண்ட் ”	9	0	0
ஒரு வால்யூமை இரண்டு பாகமாகப் பிரித்துப் பைண்ட் செய்தது	10	0	0

இந்தியாவிற்குள் இருப்பவர், இரயில்வே பார்சல் மூலமாகப் பெற்றுக்கொள்ளலாம். பர்மா, ஸிலோன், மலேயா முதலிய இடங்களுக்குத் தபால் மூலமாகத் தான் அனுப்ப இயலும். இந்தியா பர்மா ஸிலோனில் உள்ள இடங்களுக்கு வால்யூம் ஒன்றிற்கு ரூ. 2-ம், மலேயா, தென்னாப்பிரிக்கா முதலிய வெளிநாடுகளுக்கு ரூ. 3-ம், தபால் பார்ஸல் சார்ஜ் ஆகும்.

இந்தியாவில் உள்ளவர் வேண்டிய வால்யூமின் விலையை அனுப்பித் தம்மூருக்கு அடுத்திருக்கும் இரயில் ஸ்டேஷனைத் தெரிவிக்கவும். அல்லது தபால் பார்ஸலில் பெற்றுக்கொள்ள விரும்பினால், அந்தக் கட்டணத்தையும் சேர்த்து அனுப்பவும்.

வெளி நாடுகளில் உள்ளவர் வேண்டிய வால்யூம்களின் விலையையும் தபால் கட்டணத்தையும் சேர்த்து அனுப்புதல் வேண்டும். இவைகளை வி. பி. யில் அனுப்ப இயல்வதில்லை.

199188

ஆயுர்வேத வித்வான் B. V. பண்டிட்ஸ் நஞ்சன்கூடு "சத்வைத்யசாலை" மருந்துகள்

"ஆல்மண்டைன்" (டானிக்). "பாலக்ஸ்" பேதிமாத்திரை. "ஸ்ப்ளிவரால்" (குழந்தை கட்டிக்கு)

மட. ச்யாவனப்ராச — மட. பிருங்காமலக தைலம் — கோரோஜன மாத்திரை

சுமார் 300 போலிகள் ஏமாற்றும். **"நஞ்சன்கூடு பல்பொடி"** தயவுசெய்து கவனித்து வாங்கவும்.

சாதாரணம்-பாக்கெட் — மட. பெ. மெடிகேடட்-டப்பி

மட. ச்யாவனப்ராச. சிறந்த டானிக் சத்வைத்யசாலை - நஞ்சன்கூடு

காஸ்ட்ராலகஸ்

ஜவரேக்

[பண்டங்கள் வைத்தியர்களுக்கு மட்டும்] [அட்வான்ஸுடன் ஆர்டர் செய்யவும்.]

KALANILAYAM
REG. NO. M. 2324.

வர்த்தமானம்

பத்திரிகைப் பங்களா:— அமெரிக்காவில் மெயின் என்ற இடத்தில் பத்திரிகைகளினுல் கட்டப்பட்ட பங்களா ஒன்று இருக்கின்றது. அப்பத்திரிகைப் பங்களாவின் சுவர்களுக்கு 25000 பத்திரிகைகள் ஒட்டப்பட்டனவாம். பத்திரிகைகளினுல் கட்டப்பட்டபின் வார்னிஷ் பூசியிருக்கிறதாம். அங்குள்ள மேஜை நாற்காலிகள் கூடப் பத்திரிகைகளினலேயே செய்யப்பட்டனவாம்.

* * *

முத்தமிடும் மீன்கள்:—உலகத்திலேயே வேறெங்குமில்லாத ஒருவகை முத்தமிடும் மீன்கள் போர்னியோத் தீவின் அருகிலுள்ள சமுத்திரத்தில் வசிக்கின்றனவாம். இந்த மீன்கள் அங்குக்கூட அருமையாகத்தான் இருக்கின்றனவாம். இவைகளில் மிகவும் அழகாகவுள்ள சில முத்த மீன்களை ஹாலண்டு தேசத்திலுள்ள மீன் காட்சிச்சாலையில் வைத்துள்ளார்கள்.

* * *

பெருங் கால்வாய்:—அமெரிக்காவிலுள்ள சான் பிரான்சிஸ்கோ நகரத்திற்கு நீர் அளிக்குமாறு 150 மைல் நீளமுள்ள ஒரு கால்வாயைக் கட்டி முடித்திருக்கிறார்கள். இந்தக் கால்வாய், உலக சரிதத்திலேயே ஒரு அதிசயமாகும். இதைக் கட்டி முடிக்க இருபது ஆண்டுகள் ஆயின. இதற்குச் செலவு செய்தது இரண்டு கோடிப் பவுன்களாகும். இந்தக்கால்வாய் மிகுந்த தண்ணீர் வசதி அளிப்பதோடுகூட மின்சார சக்தி உண்டு பண்ணவும் உபயோகமானதாம். ஓர் இடத்தில் இக்கால்வாய்க்காக இருபத்தெட்டரை மைல் தூரம் ஒரு மலையைக் குடைந்திருக்கிறார்கள். இந்த வேலையில் முப்பத்தைந்து மனிதர்கள் உயிரை இழந்திருக்கிறார்களாம்.

மனிதனைத் தாங்கும் இலை:—ஒரு மனிதனைத் தாங்கக்கூடிய அகலமான இலைகள் நீரில் வளருகின்றன. இவைகளுக்கு "விக்டோரியா ரீகியா லில்லி" என்று பெயரிட்டிருக்கின்றார்கள். இவ் இலைகளின் ஒன்றில் ஒரு மனிதன் சாதாரணமாக ஏறி உட்கார்ந்துகொள்ளலாம். இவை அவ்வளவு கனம் தாங்கியும் நீரில் அமிழ்வதே யில்லை. இவைகளில் சில இலைகள் 40 அடி சுற்றளவு கூட இருக்கின்றனவாம்.

* * *

சிந்தனையின் வலிமை:-சிந்தித்த மட்டிலேயே ரயில் வண்டியை ஓட்டுவிக்கக் கூடிய ஒரு கருவியை லண்டன் வாசியான மேஜர் ரேய்மண்டு பிலிப்ஸ் என்பவர் கண்டுபிடித்திருக்கிறாராம்.

* * *

மிகப் பெரிய தூரதரிசினி:—அமெரிக்கா நியூயார்க் கண்ணுடித் தொழிற்சாலையினின்று சமீபத்தில் மிகப் பெரிய தூரதிருஷ்டிக் கண்ணுடி யொன்று செய்து முடிக்கப்பட்டிருக்கின்றது. அதன் உதவியைக் கொண்டு 520,0,000000,000000, 000000 மைல்கள் அதாவது (கோடி கோடி கோடி) மைல்கள் பார்க்க முடியுமென்று கூறுகின்றனர். இக்கண்ணுடியின் கனம் 20 டன். அது 16 அடி 8 அங்குல குறுக்களவுடையது. அதை வார்த்து முடிப்பதற்கு 7 மாதங்கள் ஆயின வென்று கூறப்படுகிறது. இதன்விலை ஒரு லட்சம் பவுன்களுக்கு அதிகமாகிறதென்று கூறப்படுகின்றது. செவ்வாய்க் கிரகத்தின் முழு விவரங்களையும் இத் தூரதரிசினி மூலவாக மிகத்தெளிவாகக் காணலாம். செவ்வாய்க் கிரகத்தில் உயிர்கள் உண்டாஎன்பதையும், அங்குக் காணப்படும்தோற்றங்கள் எத்தகையவை என்பதையும்இதனுல்தெரிந்துகொள்ளலாமாம்.

NATIONAL INSURANCE COMPANY, LIMITED.
Head Office:
NATIONAL INSURANCE BUILDING,
362, China Bazar Rd, Esplanade, Madras.

1933 Results.

New Business Completed exceeds ... ... Rs. 1,67,00,000

The Company with a steady progress all round.
All forms of life assurance policies issued at low sale rates of premium.

Specialities.

Female Lives
Joint Lives
Permanent Protection Policies
Triple Benefit Policies.
Marriage & Future Provision Policies.

For agencies please apply to:—

Branch Secretary, 362, China Bazar Road, Esplanade, Madras. OR R. G. DAS & Co., *Managers.*

Consult
NATIONAL FIRE AND GENERAL INSURANCE COMPANY Ltd.,
Head Office:—
NATIONAL INSURANCE BUILDING,
362, China Bazar Rd, Esplanade, Madras.
for Fire, Motor & Accident policies.

A sound Company.

Please apply for particulars to:—

Branch Secretary, 362, China Bazar Road, Esplanade, Madras. OR R. G. DAS & Co., *Managers.*

யுனைடெட் இந்தியா
லைப் அஷ்யுரன்ஸ் கம்பெனி, லிமிடெட், சென்னை.
ஹெட் ஆபீஸ்:—சென்னை. 1906ஷு ஸ்தாபித்தது.
யுனைடெட் இந்தியாவில், லைப் இன்ஷுயரன்ஸின் சிறந்த பயன்கள் குறைந்தசெலவில் கிடைக்கும்.
யுனைடெட் இந்தியாவில் பாலிஸி எடுத்துக்கொள்வது மிகச்சிறந்த இன்வெஸ்ட்மெண்டும், வயது காலத்திற்கும் குடும்பத்திற்கும் இணையற்ற ஆதரவும் ஆகும்.
யுனைடெட் இந்தியாவே, தென்னிந்தியாவில் மற்றெல்லாக் கம்பெனிகளுக்கும் முன்னுல் ஸ்தாபித்தது.
யுனைடெட் இந்தியா முற்றிலும் பத்திரமானதும் கெட்டிதிட்ட முடையதும் ஆன கம்பனி.
ஹெட் ஆபீஸ்:— செம்புதாஸ் தெரு, சென்னை. அல்லது இந்தியா, பர்மா, ஸிலோனில் உள்ள பிராஞ்சுகள்
இவைகளுக்கு எழுதி முழு விவரமும் இது பற்றிய பிரசுரங்களும் பெற்றுக்கொள்ளலாம்.

இந்தியா தேசத்து இணையற்ற இரத்தினம்
ஆதங்க நிக்ரஹ மாத்திரைகள்
தேக பலத்தையும், இரத்த விருத்தியையும், ஞாபக சக்தியையும், தாது புஷ்டியையும் கொடுப்பதில் நிகரற்ற ஔஷதம். சென்ற 50 வருஷங்களாக இலட்சக்கணக்கான ஜனங்களால் உபயோகிக்கப்பட்டு வருகின்றன.
32 மாத்திரைகளடங்கிய டப்பி 1-க்கு விலை ரூ. 1
இனும்! இனும்!!
"இன்பவாழ்க்கையாலடைந்த சக்தி"
இனுமாகவும் தபாற்செலவில்லாமலும் அனுப்பப்படும்.
ஆதங்க நிக்ரஹ ஔஷதாலயம்,
26 பிராட்வே, மதராஸ்.

Printed at the B. N. Press, Mount Road and Published by Mr. E. Kumariah, B.A., B.L., (Editor)